விலை: 30.00
பக்கங்கள் - 32 + IV
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 18 ஞாயிற்றுக்கிழமை (02.08.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 227

## ● கர்ணன் வழியில் செஞ்சோற்றுக் கடன் தீர்ப்பதற்காக ●

# தமிழ் மக்களுக்கு வஞ்சகம் செய்யத் தயார் இல்லை



### கூட்டமைப்புக்கு நீதியரசர் விக்னேஸ்வரன் பதில்

(யாழ்ப்பாணம்)

கர்ணன் வழியில் செஞ்சோற்றுக் கடன் தீர்ப்பதற்காக தமிழ் மக்களுக்கு வஞ்சகம் செய்யத் தயார் இல்லை என்று தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் வட மாகாண முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பதிலடி கொடுத்துள்ளார்.

(30ஆம் பக்கம் பார்க்க)














## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

பாராளுமன்ற பொதுத் தேர்தல் - 2020
யாழ். - கிளிநொச்சி மாவட்டம்

புதிய அரசியல்
அணுகுமுறைக்கான
ஒரே தேர்வு...



சண்முகராஜா அரவிந்தன்
(முன்னாள், யாழ். மாநகரசபை உறுப்பினர்)
சிரேஷ்ட உபதலைவர், தமிழர் விடுதலைக் கூட்டணி.

X 1

(C-249)

தமிழர் விடுதலைக் கூட்டணி (T.U.L.F)

**மண்டைதீவில் தேர்த் திருவிழா**

(மண்டைதீவு)

மண்டைதீவு வேபந்திடல் ஸ்ரீ முத்து மாரி அம்மன் ஆலய தேர்த் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறும்.

காலை 8 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று 10 மணிக்கு அம்பாள் தேரில ஆரோகணிப்பார்.


(ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



இரு
தேசம்
ஒரு நாடு
இதுவே
எமது
இலக்கு

சட்டத்தரணி
விஸ்வலிங்கம் மணிவண்ணன்



அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

(C-239)

X 8

பாராளுமன்ற
தேர்தல் 2020

சமஉரிமையுடன்
நிலையான
அபிவிருத்திக்கு
வாக்களியுங்கள்..



அ.கிருபாகரன்

யாழ்ப்பாணம் கிளிநொச்சி
தேர்தல் மாவட்டம்

கிருபா லேணர்ஸ்
அதிபர்

(C-248)


ஐக்கிய
மக்கள்
சக்தி

X 2

பாராளுமன்றத் தேர்தல் - 2020
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்



மாற்றம் என்பது காலத்தின் தேவை
மாற்றத்தை விரும்பி ஏற்று
மாற்று அணியான நீதியரசர்
விக்னேஸ்வரன் ஐயாவின் அணியை
ஆதரிப்பீர்....!



மீண்டெழும்
பாண்டியர்
வரலாறு


சுரேஷ் பிரேமச்சந்திரன்
(தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி
இணை ஊடகப் பேச்சாளர்)

X 3

1 2 3 4 5 6 7 8 9 10

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி

(C-234)



பாராளுமன்றத் தேர்தல் - 2020
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

சுயேட்சைக் குழு - 05
அரசியல் வெற்றிக்கும்
அபிவிருத்திக்குமான உங்கள் தெரிவு

திருநாவுக்கரசு சிவதாசன்
( கரசன் )
( வர்த்தகர், முன்னாள் மாநகரசபை உறுப்பினர் )

X 6



(107)

யாழ்ப்பாண கிளிநொச்சி மாவட்ட
வாக்காளர்களே உங்கள் ஏகோபித்த
ஆதரவை வழங்கி வெற்றி பெறச் செய்யுங்கள்.

யாழ். வர்த்தக சமூகம்

Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 18 ஞாயிற்றுக்கிழமை (02.08.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 227

எல்லாவற்றையும் இழந்து விட்டோம் என்று நீங்கள் நினைக்கும்போது ஒன்றை மட்டும் மறவாதீர்கள் நிச்சயம் எதிர்காலம் ஒன்று உண்டு. அதற்கு இழப்பொன்று இல்லை. - கிராப்டன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தியாகம் நிறைந்த தமிழினமே ஒன்றுபட்டு ஆணை கொடு!

இலங்கையின் ஒன்பதாவது பாராளுமன்றத் தேர்தல் எதிர்வரும் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தேர்தலுக்கான பிரசாரப் பணிகள் இன்று நள்ளிரவுடன் நிறைவுக்கு வருகிறது.

தேர்தல் பிரசாரம் முடிவுக்கு வருவதோடு பொதுமக்கள் தங்களின் தீர்ப்பை வழங்குவதற்கான கால அவகாசமே எஞ்சிய நாட்கள்.

அதாவது பொதுமக்களை நீதியாயத்தில் இருத்தி வேட்பாளர்கள் தங்கள் பற்றி உரக்கக் கூறினர். எங்களை நீங்கள் பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்தால், நாங்கள் என்ன செய்வோம் என்பதையும் எங்களை விட்ட ஏனையவர்களுக்கு ஏதும் தெரியாது என்பது போலவும் பிரசாரங்கள் அமைந்திருந்தன.

இதற்கு மேலாக, பொதுமக்களின் இல்லங்களுக்குச் சென்று எங்களுக்கு வாக்களியுங்கள் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது தேவைக்கதிகமான துண்டுப் பிரசுரங்கள், மாதிரி வாக்குச்சீட்டுக்கள், கொள்கைப் பிரசுரங்கள் என அச்சகங்களுக்குப் பரவாயில்லை என்பதைத் தவிர, படித்தறிந்தார் எத்தனை பேர் என்ற கணக்குத் தெரியாமல் இருப்பதே செலவிட்டார் மனம் நோகாமல் இருக்க வழியாகும்.

இங்கு நம்மைத் தேடி வந்தவர், வராமல் விட்டவர், கடிதம் அனுப்பியவர், கண்ட இடத்தில் கதைத்தவர், தலையாட்டிச் சிரித்தவர் ஆதலால் அவருக்கு வாக்கு என்ற தீர்ப்பும் நம் தமிழர் பண்பாடாயிற்று.

இதுவே இத்துணை தூரம் நம்மைத் துன்பப்படுத்திற்று என்றுணரும்போது,

தீர்ப்பு தீர்ப்பாக இருப்பதே சிறப்பு என்ற முடிவுக்கு நாம் வந்தாக வேண்டும்.

இங்கு யாருக்கு வாக்களித்தல் என்றுரைப்பது முறையன்று.

மாறாக தீர்ப்பை வழங்குகின்ற நீங்களே நீதிபதிகள். ஆகையால் யாருக்கு வாக்களிப்பது என்பதை நீங்களே முடிவெடுங்கள்.

தமிழினத்தின் நன்மை கருதி, எந்நாளும் துன்பப்படும் எம் மக்களின் துயர் நினைந்து யாருக்கு வாக்களித்தால் அது தகுமோ நீதியாகுமோ அவருக்கே உங்கள் வாக்குகளை வழங்குங்கள்.

நீங்கள் ஒன்றுபட்டு வழங்கும் ஆணை தமிழ் இனத்தின் அரசியல் தலைமை இது வென்று உலகறியச் செய்யட்டும்.

எங்கே உங்கள் தீர்ப்பை எழுதுங்கள்.

## தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வுக்கு அவசியமில்லை

### சிங்கள தீப ஜாதிக பெரமுன

(கொழும்பு)

இலங்கையில் தமிழ் மக்களுக்கு சிங்கள மக்களால் எவ்வித அநீதியும் இழைக்கப்படவில்லை. எனவே தமிழருக்கான அதிகாரப் பகிர்வு என்பது அவசியமில்லாத ஒன்று என சிங்கள தீப ஜாதிக பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் ஜயந்த லியகனே தெரிவித்தார். (31ஆம் பக்கம் பார்க்க)

## நீதியரசர் விக்னேஸ்வரன் தமிழ்த் தலைமையை ஏற்றால் பேரினவாதத்துக்கு ஆபத்து

### கவனமாக அணுகுமாறு சிங்கள புத்திஜீவிகள் எச்சரிக்கை

(கொழும்பு)

தமிழ் மக்களின் அரசியல் தலைமை அதிகாரத்துடன் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் பாராளுமன்றத்துக்கு வருவாராயின் அவர் ஆற்றுகின்ற பாராளுமன்ற உரைகள் சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் என சிங்களப் புத்திஜீவிகள் கருத்துரைத்துள்ளனர்.

எனவே நீதியரசர் விக்னேஸ்வரனின் வெற்றி தொடர்பில் சிங்களத் தரப்புகள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும் என சிங்களப் புத்திஜீவிகள் எச்சரிக்கையும் செய்துள்ளனர். (31ஆம் பக்கம் பார்க்க)

அளித்த வாக்குகள்
## மக்களை வாழ வைக்கும்
அங்கஜன் இராமநாதன்



29

## வவுனியாவில் உறவுகள் கவனயீர்ப்புப் போராட்டம்

(வவுனியா)

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

1261ஆவது நாளாக வவுனியா வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு முன்பாக சுழற்சி முறையில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் அவர்களது போராட்ட தளத்தின் முன்னால் நேற்று இப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. 31

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தம்
## மக்களின் அடிப்படை உரிமையை மீறியுள்ளது
### பிரதமர் மகிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

அரசியலமைப்பின் 19 வது திருத்தம் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளதாக பொதுஜன பெரமுனவின் தலைவரும் பிரதமருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 31

தேர்தல் பிரசாரங்கள்
## இன்று நள்ளிரவுடன் முடிவடைகின்றது

(கொழும்பு)

பொதுத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் இன்று நள்ளிரவுடன் முடிவடைகின்றன.

இன்றைய தினம் நள்ளிரவு முதல் பிரசாரக் கூட் 31


தேர்தல் பரப்புரையின் தொகுப்பு
1 விஞ்ஞாபன வெளியீடு
2 தெல்லிப்பளை
3 வீரசிங்க மண்டபம்
4 கோப்பாய்
5 வரணி இயற்றாலை
6 சுன்னாகம்
7 வடமராட்சி
8 துன்னாலை மேற்கு
9 கிளிநொச்சி
“அடுத்த 5 வருடங்களில் யாழ்–கிளிநொச்சி மாவட்டங்களை முதல் நிலை மாவட்டங்களாக மாற்றும் பயணம்”
X 2 அருண் சித்தார்த்
X 3 கந்தையா தியாகலிங்கம்
X 4 ஜோசப் பிரான்சிஸ்
X 5 பரநிருபசிங்கம் வரதராஜசிங்கம்
X 6 பவதாரணி ராஜசிங்கம்
X 7 பாலகிருஷ்ணன் முகுந்தன்
X 8 ஸ்ரனிஸ்லாஸ் செலஸ்ரின்
X 9 சங்கரப்பிள்ளை பத்மராஜா
X 10 சிவலிங்கம் கேதீஸ்வரன்
X 1 அங்கஜன் இராமநாதன்
(C-230)
ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி - Sri Lanka Freedom Party
"என் கனவு யாழ்" திறன் செயலியை தரவிறக்கம் செய்ய
App Store
Google Play
www.enkanavuyarl.lk




## துப்பாக்கி வைத்திருந்தவரிடம் விசாரணை

(கொழும்பு)

றிப்பிட்டர் ரக துப்பாக்கியை மறைத்து வைத்திருந்ததாக கைதான சந்தேக நபரை 3 நாட்கள தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்ள சம்மாந்துறை பொலிஸார் நட வடிக்கை எடுத்துள்ளனர். அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் ஒன்றில பிரசார நடவடிக்கை ஒன்றிற்காக வந்திருந்த தேசிய காங்கிரஸ் அணியின் வாகனம் ஒன்றில் நேற்று முன்தினம் மாலை பாய் ஒன்றின் கீழ் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் றிப்பிட்டர் ரக துப்பாக்கி ஒன்று 6 தோட்டாக்களுடன் மீட்கப்பட்டிருந்தது. இவ்வாறு கைது செய்யப்பட்ட நபரை தடுத்து வைத்து விசாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஜ-4)

## வாக்காளர்களுக்கான அறிவிப்பு

(கொழும்பு)

கொரோனா தொற்றால், காலாவதியான சாரதி அனுமதிப்பத்திரத்தை புதுப்பிதது க் கொள்ளமுடியாதவர்களின் சாரதி அனுமதிப் பத்திரங்களை, செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரங்களாக கருதி வாக்களிப்பதற்கு அனுமதிக்க தேர்தல ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, மோட்டார் வாகனத் திணைக்களத்தால் காலாவதியான அனுமதிப்பத்திரங்கள் செல்லுபடியாவதற்காக வழங்கப்பட்டுள்ள நிவாரண காலத்துக்காக அனுமதிக்கப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரங்களை வைத்திருப்பவர்கள் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தி, வாக்களிப்பதற்காக பயன்படுத்த முடியும் என்றும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மார்ச்சிலிருந்து ஜூன வரையான காலப்பகுதிக்குள் காலாவதியாகும் சாரதி அனுமதிப்பத் திரங்களுக்காக ஜூன் மாதத்திலிருந்து .செப்டெம்பர் வரை நிவாரண காலம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ஜ-4)






## இராசிபலன்

02.08.2020
ஆடி18, ஞாயிற்றுக்கிழமை
சதுர்த்தசி பின்னிரவு 9.57 மணிவரை
பூராடம் முற்பகல் 8.06 மணிவரை
சுபநேரம் 9.03-10.33 மணிவரை
இராகுகாலம் 4.33-6.03 மணிவரை
சந்திராஷ்டமம் மிருகசீரிடம்,
சித்தாமிர்தம் வளவன்

**மேஷம்** ஆரோக்கியத்தில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும், நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்** ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், உறவினர்களிடம் பேசும் போது கவனம் தேவை, பிரயாண பயமுண்டு.

**மிதுனம்** சடங்கு சம்பிரதாயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**கடகம்** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், மருத்துவச் செலவுகள் குறையும், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், காரிய அனுகுலமுண்டு.

**சிம்மம்** வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம் பெறலாம், சிறப்பான நாள்.

**கன்னி** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**துலாம்** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்புண்டு, உறவினர் வழியில் உற்சாகமான தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** நல்ல காரியத்திற்கு பிள்ளையார் சுழி போடும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும்.

**தனுசு** சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள்.

**மகரம்** திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், பயணத்தால் பலனுண்டு, இறை வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**கும்பம்** அந்நியதேச தொடர்புகள் எண்ணியபடியே கிடைக்கும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், எதிர்பார்த்த தனவரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மீனம்** முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், மனங்குளிரும் செய்திகள் வந்து சேரலாம்.

அனுபவம் ஓர் அழகான ஆன்மீகக் கண்ணாடி

# ஆலயத்தில் தரிசனம் செய்வதைவிட வீட்டிலிருந்து வழிபடுவது மேல்

## யாழ்.மாநகர பதில் முதல்வர்

(குப்பிழான்)
தற்போதைய சூழ்நிலையில் அடியவர்கள் நல்லூர்க் கந்தன் ஆலயத்திற்கு வருகை தந்து தரிசிப்பதை விட வீட்டிலிருந்து வழிபடுவது தான் பொருத்தமானது எனவும் இதற்கு அடியவர்கள் அனைவரும்பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் யாழ்.மாநகரசபையின் பதில் முதல்வர் து.ஈசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நல்லைக் குமரன் மலர் வெளியீட்டு விழா நேற்று முன் தினம் யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் இவ்வருட உற்சவம் தொடர்பாக ஆலய நிர்வாகமும் யாழ்.மாநகர சபைக் குழுவும் இணைந்து கலந்துரையாடியது. இதில் ஆலயத்திற்கு கூடிய அளவு அடியவர்களை அனுமதிக்குமாறு ஆலய நிர்வாகம் கேட்டுக் கொண்டது.

கொரோனா நோயின் தாக்கம் அதிகரித்துச் செல்வதால் அவ்வாறான அனுமதியை வழங்குவதற்கு எங்களுடைய வைத்திய அதிகாரிகள் மறுப்புத் தெரிவித்தனர்.

வைத்திய அதிகாரிகளின் அறிவுறுத்தலை மீறி என்னால் செயற்பட முடியவில்லை.

அத்துடன் நான் கடிதங்கள் அனுப்பிய அதிகாரத்திலுள்ள தரப்பினருக்கு இங்குள்ள வைத்திய அதிகாரிகளும் கடிதம் அனுப்பியுள்ளார்கள். நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் பெருந் திரளான அடியவர்கள் வருகை தந்து தரிசிப்பதால் கொரோனா நோய்த் தாக்கம் ஏற்பட்டு விபரீதம் ஏற்படுமென அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டு அனுப்பியுள்ளார்கள் எனத் தெரிவித்தார்.

கொரோனா தொடர்பான நிலைப்பாடுகளில் மாற்றங்கள் ஏற்படுவதால் நடைமுறைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் உள்ளது என அவர் தெரிவித்தார்.(4-5-18)



## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)
நாரந்தனை தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோவில் சைவ மகா சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் இன்று 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் தான்தோன்றி ஸ்ரீ அம்பாள் ஆலய மண்டபத்தில் சபைத் தலைவர் வே.துரைராஜா தலைமையில் நடைபெறும். (5)

## தீர்த்தோற்சவம்

(யாழ்ப்பாணம்)
நல்லூர் சட்டநாதர் கோவில் மேற்கு வீதி ஸ்ரீபால கதிர்காம தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவத்தில் நாளை 3 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4.30 மணியளவில் விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து மாலை 6 மணியளவில் தீர்த்தோற்சவம் நடைபெறும் என ஆலய தர்மகர்த்தா சிவஸ்ரீ சௌபாக்கிய மதனகுமாரக் குருக்கள் தெரிவித்துள்ளார். (5)

## Jaffna Got Talent-2020 மாபெரும் இறுதிச் சுற்று

(யாழ்ப்பாணம்)
யாழ். தீபகற்பத்தில் உள்ள தமிழ் இளைஞர்-யுவதிகளின் திறமைகளை உலகறியச் செய்யும் வகையில் முதன் முறையாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நடன மற்றும் பாடல் கலைத் திறனை வெளிக்கொணரும் சந்தர்ப்பத்தினை யாழ். பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதியின் எண்ணக்கருவிற்கு அமைவாக **Jaffna Got Talent-2020** மாபெரும் சுற்றுப் போட்டியானது ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இவ் **Jaffna Got Talent-2020** மாபெரும் இறுதிச் சுற்றானது இன்று 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணியளவில் யாழ்ப்பாணம் தந்தை செல்வா மண்டபத்தில் சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக நடைபெறும். (4-5)

# தனிமைப்படுத்தலில் இருந்த பெண்ணிற்கு யாழில் சுகப் பிரசவம்

## தாயும் சேயும் நலமென வைத்தியர்கள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)
சவுதி அரேபியாவில் இருந்து, நாட்டிற்கு அழைத்து வரப்பட்டு, விடத்தல்பளை தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்ட கர்ப்பவதித் தாயார் நேற்று முன்தினம் குழந்தையைப் பெற்றுள்ளார்.

அந்தக் குழந்தை சுகதேகியாக இருப்பதாக, யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். சவுதி அரேபியாவில் பணிப்பெண்ணாக பணியாற்றிய இப்பெண் திருகோணமலை கிண்ணியா பிரதேசத்தைச் சேர்ந்தவர்.

கொவிட்-19 வைரஸ் தொற்றுக் காரணமாக, சவுதி அரேபியாவில் இருந்து இலங்கைக்கு அழைத்துவரப்பட்டு, யாழ்ப்பாணத் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த வேளையில், கடந்த வியாழக்கிழமை குழந்தைப் பேற்றுக்காக இராணுவத்தினரால், யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள கொரோனா தனிமைப்படுத்தல் சிகிச்சை நிலையத்தில் சேர்க்கப்பட்டார். அங்கு மகப்பேறு இடம்பெற்றது.

மகப்பேற்றின் பின்னர், குழந்தையும் தாயும் நலமாக இருப்பதாகவும் வைத்தியர்கள் தெரிவித்ததுடன், சிகிச்சை விடுதியில் தனிமைப்படுத்தல் சிகிச்சைக்காக எவரும் அற்ற நிலையில், தனியாக, கண்ணாடி பொருத்தப்பட்ட தனியான விடுதியில் இந்த தாய்க்கும் சேய்க்குமான சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

சிகிச்சையின் பின்னர், யாழ். போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் இருந்து, திருகோணமலைக்கு அனுப்பிவைப்பதற்கான ஏற்பாடுகளை, வைத்தியசாலை மற்றும் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி ருவான் வணிகசூரியவின் பணிப்புரைக்கு அமைவாக, விடத்தல்பளை படைத் தலைமையகத்தின் ஊடாக, மருத்துவ சான்றிதழ்கள் வழங்கப்பட்டு, அனுப்பி வைக்கப்படவுள்ளனர். (5-101)

# ஷானி அபேசேகர கைது விவகாரம் சி.ஐ.டியின் முன்னாள் அதிகாரிகளுக்கு வலைவீச்சு



(கொழும்பு)

குற்றப் புலனாய்வுத் திணைக் களத்தின் முன்னாள் பணிப் பாளரான பணி இடை நிறுத் தம் செய்யப்பட்டுள்ள சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர, சி.சி.டி. எனப்ப டும் கொழும்பு குற்றத் தடுப் புப் பிரிவினரால் கைது செய் யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பம்பலப்பிட்டி கோடீஸ்வர வர்த்தகர் மொஹம்மட் சியாம் படுகொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட் டுள்ள, முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தன உள்ளிட்ட 8 பேருக்கு எதிராக முன்னெ டுக்கப்பட்ட வெலிவேரிய பகுதி ஆயுதக் கிடங்கு விவ கார விசாரணைகளில், சந் தேக நபர்களைக் கைது செய்ய புதிதாக சாட்சியங் களை உருவாக்கியதாக கூறி அவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஜாலிய சேனாரத்ன தெரிவித் தார்.

பொலிஸ் தலைமையகத் தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் காலை கொழும்பு-நாரஹேன்பிட்டி, எல்விட்டிகல மாவத்தையில் உள்ள தொடர்மாடி குடி யிருப்பில் அமைந்துள்ள ஷானி அபேசேகரவின் வீட் டுக்கு சென்ற சி.சி.டி யின் பதில் பணிப்பாளர் உதவி பொலிஸ் அத்தியட்சர் நெவில் டி சில்வா தலைமையிலான குழுவினர் அவரைக் கைது செய்தனர்.

கடந்த ஜூன் 24 ஆம் திகதி கொழும்பு குற்றத் தடுப் புப் பிரிவுக்கு பதில் பொலிஸ் மா அதிபர் வழங்கிய விசேட உத்தரவுக்கு அமைய ஆரம் பிக்கப்பட்ட விசாரணைக ளுக்கு அமைய இந்த கைது இடம்பெற்றுள்ளதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட் சகருடன் இணைந்து சாட் சிகளை உருவாக்கியதாக குற்றம் சுமத்தப்படும் மேலும் இரு சி.ஐ.டி. முன்னாள் அதி காரிகளைக் கைது செய்ய கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவு வலை விரித்துள்ள தாகவும் அவர் சுட்டிக்காட் டினார்.

வர்த்தகர் சியாம் கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தன, அவரது மகன் ரவிந்து வாஸ் குண வர்த்தன உள்ளிட்ட 7 பேர், வாஸ் குணவர்த்தனவின் மனைவி சமிலா பிரியதர் ஷனி பெரேரா ஆகிய 8 பேருக்கு எதிராக, அபாயக ரமான ஆயுதங்களை வைத் திருந்தமை தொடர்பில் தனி யாக வழக்கொன்று விசா ரணை செய்யப்பட்டு வந் தது.

பொலிஸ் பரிசோதகர் ஒருவரைக் கைது செய்தி ருந்த சி.ஐ.டி., அவரிடம் தடுப்புக் காவலில் செய்த விசாரணைக்கு அமைய கம்பஹா வெலிவேரிய பகு தியில் கண்டு பிடித்ததாக கூறப்படும் ஆயுதக் கிடங்கு தொடர்பில் அந்த 8 பேருக் கும் எதிராக கொழும்பு மேல திக நீதவான் நீதிமன்றில் வழக்கு விசாரணையில் இருந் தது.

இதன்போது அவ்வழக் கில் சாட்சியாளர்களாக இரு ந்த ஆயுதக் கிடங்கு இருந்த வீட்டின் உரிமையாளர்க ளான கணவன் - மனைவி உள்ளிட்ட இருவர் சாட்சி யாளர்களை சந்தேக நபர் களாக மாற்றி நீதிமன்றில் ஆஜர் செய்யவும், குற்றம் சுமத்தப்பட்டிருந்த 8 பேரை யும் விடுவிக்கவும் கொழும்பு மேலதிக நீதவான் நீதி மன்றம் அண்மையில் சி.ஐ.டி. பணிப்பாளருக்கு உத்தரவிட்டிருந்தது.

குறித்த விவகாரத்தில், ஏற்கனவே வாஸ் குணவர் த்தன உள்ளிட்டோருக்கு எதி ராக சாட்சியம் வழங்கிய பொலிஸ் பரிசோதகர், தான் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட் சகர் ஷானி அபேசேகர உள் ளிட்டவர்களின் கட்டளைக்கு அமையவே அவ்வாறு செயற் பட்டதாகவும் ஆயுதங்களை விசாரணையாளர்களே வைத் துவிட்டு மீள எடுத்ததாகவும் தனது சாட்சியை மாற்றிய நிலையிலேயே அவ்வழக் கில் குறித்த நிலைமை ஏற் பட்டது.

இவ்வாறான பின்னணி யிலேயே பதில் பொலிஸ்மா அதிபர் இவ்வாறான சாட்சி உருவாக்கம் இடம்பெற்றதா? என விசாரிக்க சி.சி.டிக்கு கட்டளையிட்டுள்ளார்.

அதன் படி முன்னெடுத்த விசாரணையிலேயே சிரே ஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட அவரை கம்பஹா நீதவான் நீதிமன் றில் ஆஜர்செய்ய நடவடி க்கை எடுக்கப்பட்டிருந்த நிலையில், ஏனைய இரு சி.ஐ.டி. அதிகாரிகளையும் கைது செய்ய காலி, அநுரா தபுரத்துக்கு இரு பொலிஸ் குழுக்கள் அனுப்பப்பட்டுள் ளன. (ஜ-4)





பாராளுமன்றத் தேர்தல் – 2020 யாழ்ப்பாணம் மாவட்டம்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்
1 சுகாஷ் சட்டத்தரணி
3 ஞானகுணேஸ்வரி ஆசிரியை, வலி கிழக்கு பிரதேச சபை உறுப்பினர்
4 காண்டீபன் சட்டத்தரணி
5 கணபதிப்பிள்ளை ஓய்வு பெற்ற பிரதி அதிபர், கொழும்பு றோயல் கல்லூரி
கஜேந்திரகுமார் பொன்னம்பலம்
தலைவர் – தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
2
10
செல்வராசா கஜேந்திரன்
பொதுச் செயலாளர் – தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
இரு தேசங்கள் ஒரு நாடு
6 ஜெயக்குமார் ஓய்வு பெற்ற உதவி பதிவாளர், யாழ் பல்கலைக்கழகம்
7 வாசுகி ஆசிரியை, நல்லூர் பிரதேச சபை
8 மணிவண்ணன் சட்டத்தரணி
9 டிலான் சமூக ஆர்வலர்
தாயகம் தேசியம் சுயநிர்ணயம்
(037)


பாராளுமன்றத் தேர்தல் - 2020
யாழ்., கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
தமிழ்த் தேசத்தின் அடையாளமாகவும்
உண்மையின் குரலாகவும் விளங்கும்
இவ்விருவரையும் வெல்ல வைத்து
தாயகம், தேசியம், சுயநிர்ணம் என்ற
அடிப்படையில் இறைமை கொண்ட
தேசத்தை வென்றெடுப்போம்
2
தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி
அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்
10
கஜேந்திரகுமார் பொன்னம்பலம்
தலைவர்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னண
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினா
X 2 10
செல்வராசா கஜேந்திரன்
பொதுச் செயலாளர்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
1. மாவட்ட மீனவர் ஒத்துழைத்து இயக்கம் (தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்துடன் இணைந்தது)
2. மாவட்ட பூந்தளிர் பெண்கள் அமைப்பு (தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்துடன் இணைந்தது)
3. மாற்றத்திற்கான மாவட்ட இளைஞர் பேரவை
4. கிராமிய உழைப்பாளர் சங்கம்
5. வடமராட்சி கிழக்கு பிரஜைகள் குழு (தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்துடன் இணைந்தது)
(095)



உரிமை வென்றிட உணர்வு பொங்கிட
விடியல் தேடும் மக்களின் கனவு பலித்திட,
ஊடகக் குரலோன் வெற்றியை உலகு உணரட்டும்!
X
4
4
ஈ. சரவணபவன்
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்
உதயன் குழுமத் தலைவர்
இலங்கைத் தமிழ் அரசு கட்சி
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
(062)

# வில்பத்து சரணாலய விவகாரம் ரீட் மனு வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

பாதுகாக்கப்பட்ட வில்பத்து சரணாலயத்தின் காட்டுப் பகுதியில், காட்டை அழித்து சட்டவிரோத கட்டுமானங்கள் மற்றும் மீள்குடியேற்றத்தை முன்னெடுத்ததாகக் கூறப்படும் விடயம் தொடர்பில் முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீன் உட்பட நபர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்குமாறு கோரி சுற்றுச் சூழல் நீதிக்கான மையம் தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பு மேன் முறையீட்டு நீதிமன்றத்தினால் திகதி அறிவிப்பு இன்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம்குறித்த ரீட் மனு தொடர்பிலான தீர்ப்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளான ஜானக டி சில்வா, நிஷங்க பந்துல கருணாரத்ன ஆகியோரால் அறிவிக்கப்படவிருந்த நிலையிலேயே இவ்வாறு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நீதிபதிகள் இருவர் உள்ளடங்கிய அமர்வுகள் எவையும் இடம்பெறவில்லை. இதனால் மேன் முறையீட்டு நீதிமன்றின் 204 ஆம் இலக்க விசாரணை அறையில் விசாரிக்கப்படவிருந்த அனைத்து வழக்குகளும் எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் வில்பத்து விவகார வழக்கின் தீர்ப்பு அறிவிக்கப்படும் நாள் தொடர்பில் எந்த அறிவித்தல்களும் நேற்று முன்தினம் மாலை வரை வெளியிடப்பட்டிருக்கவில்லை.

முன்னதாக இவ்வாறு தீர்ப்புக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ள ரீட் மனுவில் பிரதிவாதிகளாக, வன ஜீவராசிகள் திணைக்கள பணிப்பாளர் நாயகம், மத்திய சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை, மன்னார் மாவட்ட செயலர், முன்னாள்அமைச்சர் றிசாத் பதியுதீன், சட்டமா அதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டிருந்தனர்.

வில்பத்து சரணாலயத்தின் கல்லாறு வனப் பகுதியில் 2 ஆயிரத்து 388 ஏக்கரை அழித்ததன் ஊடாக பாரிய சூழல் அழிவு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக இம் மனு ஊடாக மனுதாரர்கள் குறிப்பிட்டிருந்தனர். குறித்த வனப்பகுதியை மேலும் அழித்து மேற்கொள்ளப்படும் அனுமதியற்ற குடியேற்றங்களைத் தடுப்பதற்கான தடையுத்தரவை பிறப்பிக்குமாறும் மனுவில்கோரப்பட்டிருந்தது.


இந்த வழக்கு விசாரணை நிறைவடைந்துள்ள நிலையில், கடந்த 2019 ஒகஸ்ட் 6 ஆம் திகதி தீர்ப்பு அறிவிக்கப்படவிருந்தது.


எனினும், வழக்கை விசாரித்த நீதிபதி மகிந்த சமயவர்தன தீர்ப்பை அறிவிக்க விருப்பம் தெரிவிக்காமையினால் மனுவை ஆரம்பத்தில் இருந்து மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள மேன் முறை யீட்டு நீதிமன்றத்தின் அப்போதைய தலைமை நீதிபதி யசந்த கோதகொட தீர்மானித்தார்.

அதன்படியே மேன் முறையீட்டு நீதிமன்றின் நீதிபதி ஜனக் டி சில்வாவின் கீழ் இருவர் கொண்ட நீதிபதிகள் குழாம் இவ்வழக்கை மீள விசாரித்தது. அந்த விசாரணைகளே நிறைவடைந்து வழக்கு தீர்ப்புக்காக நேற்று முன்தினம் ஒத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் தீர்ப்பு அறிவிப்பதாக இருந்தது. எனினும் குறித்த நீதிபதிகள் குழாம் அமர்வு இடம்பெறாத நிலையில், அவ் வழக்கின் தீர்ப்பு மீளவும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கில் மனுதாரரான சுற்றுச்சூழல் நீதிக்கான மையம் சார்பில் சட்டத்தரணி ரவீந்ரநாத் தாபரே ஆஜரானதுடன், சட்டமா அதிபர் சார்பில் சிரேஷ்ட அரச சட்டவாதி மனோகர ஜய சிங்க ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)


பாராளுமன்றத் தேர்தல் - 2020
யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்கள்
தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி







சிவாஜிலிங்கம் க.வி.விக்னேஸ்வரன் சிறீகாந்தா

X

❊ இனப் படுகொலை செய்தோரைத் தோற்கடிப்போம்!
❊ இனப் படுகொலை செய்த இலங்கை அரசுக்கு 2 தடவைகள் காலநீடிப்பைப் பெற்றுக் கொடுத்தோரையும் தோற்கடிப்போம் !!
❊ தமிழ் இனத்திற்கு நீதி கிடைக்க வாக்களிப்போம் !!!

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|

• தேசியம் • தாயகம் • சுயநிர்ணய உரிமை

சிவாஜிலிங்கம் : தொ.பே. 0777729020
facebook.com/ எம்.கே.சிவாஜிலிங்கம்
(091)



பாராளுமன்றத் தேர்தல் - 2020
யாழ், கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

"எங்கள் தமிழர் தேசமக்கள் விடிவுக்காக விடுதலைக்காக அர்ப்பணித்தவர்

உண்மை,
நேர்மை,
தியாகம்"





X 8

மாவை.சோ.சேனாதிராசா

இலங்கை தமிழ் அரசுக் கட்சி
(தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு)

(c-226)

# வழிபாட்டுத்தலங்களுக்கு அழிவை ஏற்படுத்த ஒருவருக்கும் இடமளிக்கப்படமாட்டாது

## ஜனாதிபதி அதிரடி



(கொழும்பு)

**வழிபாட்டுத்தலங்களின் வரலாற்று சிறப்புமிக்க உரிமைகளுக்கு அல்லது தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்தவைகளுக்கு அழிவை ஏற்படுத்துவதற்கு எவர் ஒருவருக்கும் இடமளிக்கப்படமாட்டாதென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.**

அனைத்து வரலாற்று சிறப்புமிக்க இடங்களையும் பாதுகாப்பதுடன், வெல்லஸ்ஸ உரிமையை பாதுகாக்கும் வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்குவதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவில் பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் வெற்றியை உறுதி செய்யும் வகையில் நேற்று முன்தினம் மொனராகலை வெல்லவாய பிரதான பேருந்து தரிப்பிடத்திற்கு அருகில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டபோது ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

புராதன உரிமைகளை பாதுகாக்கும் ஜனாதிபதி செயலணி ஒன்றை ஊவா வெல்லஸ்ஸவுக்கும் ஸ்தாபிக்குமாறு வேட்பாளர் பத்ம உதயசாந்த புத்தல சந்தை வளாகத்தில் ஏற்பாடு செய்திருந்த மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட ஜனாதிபதியிடம் வேண்டுகோள்விடுக்கப்பட்டது.

மொனராகலைக்கு முதலீட்டு வலயமொன்றை வழங்குவதற்கு ஜனாதிபதி எடுத்த தீர்மானத்தை மக்கள் பாராட்டினர். வட்டக்காய் மற்றும் தர்ப்பூசனி உள்ளிட்ட உபபயிர்ச் செய்கை உற்பத்தியை ஆரம்பிப்பதற்கும் மிளகு, தோடம் பழம் பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். (ஜ-4)

# 450 மாணவர்கள் சுய தனிமைப்படுத்தல்

(பொலநறுவை)

பொலநறுவை, கிரிதலே கம மத்திய மகா வித்தியாலயத்தில் கற்கும் 450 மாணவர்களும் 82 ஆசிரியர்களும் 7 ஊழியர்களும் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

லங்காபுர பிரதேச செயலகத்தில் அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளியுடன் நெருங்கி செயற்பட்ட ஆசிரியர் காரணமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த ஆசிரியர் இது வரையில் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவர் கடந்த நாட்களில் பாடசாலைகளில் கற்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)


பாராளுமன்றத் தேர்தல் - 2020

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்



1 அங்கஜன் இராமநாதன்

BSc (Eng), MBA (International)

எனது அன்புக்குரிய வாக்காளப் பெருமக்களே!
வர்த்தகப் பெருமக்களே!

தற்போதைய சூழலில் உங்கள் அனைவரையும் தனித் தனியாகச் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்காததையிட்டு மனம் வருந்துகின்றேன். தேர்தல் முடிந்த பின்னர்

60 நாட்கள் நான் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து மக்களையும் சந்தித்து, உங்கள் பிரச்சினைகள், தேவைகள் என்பவற்றை அறிந்து, பல்கலைக்கழகப் புத்திஜீவிகள் சமூகத்துடனும் கலந்து ஆலோசித்து எனது நாடாளுமன்ற அரசியல் பணியை தொடங்குவேன் என்றும் உங்களுக்கு உறுதிபடக் கூறுகின்றேன்.

சப்ததீவகத்தின் அபிவிருத்திக்கும் மற்றும் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், கிளிநொச்சிக்கான அபிவிருத்திக்கும் உண்மையான மண்ணின் மைந்தன் விண்ணன் ஆகிய என்னை வெற்றிபெறச் செய்யுங்கள்!

5 ஆம் திகதி காலையில் நீங்கள் உண்ணும் கையை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்!
எனது 5 ஆம் இலக்கத்தையும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்!

கைச்சின்னத்துக்கும் அங்கஜன் இராமநாதன் அவர்களின் வெற்றி இலக்கம் 1 இற்கும் எனது வெற்றி இலக்கமாகிய இலக்கம் 5 இற்கும் வாக்களித்து மேலும் நீங்கள் விரும்பிய ஒரு இலக்கத்துக்கும் வாக்களியுங்கள். கட்டாயமாக மூன்று இலக்கங்களைத் தெரிவு செய்து வாக்களியுங்கள். அது உங்கள் உரிமை!

ஆளும் கட்சியும் அடுத்த ஐந்தாண்டுக்கு ஆட்சியில் இருக்கப்போகும் கட்சியான எங்களுக்கு வாக்களிப்பதன் மூலம் வடக்கு-கிழக்கு இணைந்த சமஷ்டி உரிமைகளுக்கும் பாரிய அபிவிருத்தித் திட்டங்களுக்கும் இளைஞர், யுவதிகளுக்கான தொழிற்சாலைத் திட்டங்களுக்கும் உங்கள் வாக்குகளை அளியுங்கள்!

உண்மைகள் யாவையும் வெளிக்கொண்டு வருவதற்கு நாடாளுமன்றத்துக்கு செல்கின்றேன்.

"உங்கள் வாக்கு உங்கள் உரிமை சரியான முறையில் வாக்களியுங்கள்!"

தமிழ்த் தேசியமும் தமிழ்த் தாயும் பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்க.



பரநிருபசிங்கம் வரதராஜசிங்கம் (விண்ணன்)

X 5

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி

facebook.com/vinnan05

(C-237)










# 300 இற்கு மேற்பட்டோர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளில் பணிகளுக்குச் சென்ற 349 இலங்கையர்கள் நேற்றுக் காலை அந்த நாடுகளிலிருந்து இரண்டு விமானங்களின் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

முதலாவது விமானம் நேற்று நள்ளிரவு 12 மணியளவில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் டுபாய் விமான நிலையத்திலிருந்து எமிரேட்ஸ் விமானத்தில் 335 இலங்கையர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இதனைத் தொடர்ந்து, அதிகாலை 1.30 மணியளவில் கட்டார், டோஹாவில் வணிகக் கப்பல்களில் வேலை செய்வதற்காக சென்ற 14 இலங்கையர்கள், கட்டார் ஏர்வேஸ் விமானத்தின் மூலம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவ்வாறு காட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கிய பயணிகள் அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டதுடன் தனிமைப்படுத்தலுக்காக தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (ஜ-4)

# கட்சியில் இருந்து நீக்கியதால் கவலைப்படப் போவதில்லை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து என்னை நீக்கியதால் துளியளவும் கவலை இல்லை என்றும் தன்னுடன் மலையக மக்கள் இருக்கின்றனர் என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட வேட்பாளர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

பதுளை, லுணுகலை ஹொப்டன் பகுதியில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "பதுளை மாவட்டத்தில் தமிழ் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை இல்லாதொழிப்பதற்கு பல சூழ்ச்சி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வாக்குகளை சிதறடிப்பதற்காகவும் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

எது எப்படியிருந்தாலும் ஐக்கிய மக்கள் சக்தியை ஆதரித்து என்னையும், அண்ணன் அரவிந்தகுமாரையும் நாடாளுமன்றம் அனுப்ப வேண்டும் என்பதில் தமிழ் மக்கள் உறுதியாக உள்ளனர்.

6 ஆம் திகதியாகும்போது பதுளை மாவட்ட தமிழ் பேசும் மக்கள் யார் பக்கம் நிற்கின்றார்கள் என்பது தெரியவரும்.

ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக்கட்சிக்கு சிறப்பான தலைமைத்துவத்தை வழங்கி, நெருக்கடிகள் கொடுக்காமல் இருந்திருந்தால் ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாஸவே வெற்றி பெற்றிருப்பார்.

ஆனால், ரணிலும் மத்திய வங்கி கொள்ளையர்களும் ராஜபக்ஷக்களுக்கு வக்காளத்து வாங்கியதால் சஜித்துக்கு தோல்வியடைய வேண்டிய நிலை ஏற்பட்டது.

எம்மை கட்சியைவிட்டு நீக்கினாலும் பரவாயில்லை, மக்கள் எம்முடன் இருக்கும்வரை எவ்வித கவலையும் இல்லை" என கூறினார். (ஜ-4)




### பெரிய வெங்காயத்திற்கான
# இறக்குமதி வரி அதிகரிப்பு

(கொழும்பு)

நிதி அமைச்சினால் பெரிய வெங்காயத்திற்கான இறக்குமதி வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயத்திற்கு அறவிடும் வரி 15 ரூபாவிலிருந்து 50 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த அதிகரிப்பு நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. (ஜ-4)

# ஷானி அபேசேகர விளக்கமறியலில்



(கொழும்பு)

குற்றப்புலனாய்வுத் திணைக்கள முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர எதிர்வரும் 7 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு கம்பஹா நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை கொழும்பு குற்றவியல் பிரிவினரால் கைது செய்யப்பட்ட குற்றப்புலனாய்வுத் திணைக்கள முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர 8 மணித்தியாலங்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

பின்னர் அவர் கம்பஹா நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் இந்த விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

### புதிய நாடாளுமன்ற அமர்வுக்கான
#### சுகாதார வழிகாட்டல் நாடாளுமன்றத்திற்கு

(கொழும்பு)

பொதுத் தேர்தலின் பின்னர் நாடாளுமன்றம் கொவிட்-19 சவாலுக்கு முகங்கொடுத்து சுகாதாரப் பாதுகாப்புடன் அமர்வுகளை முன்னெடுப்பதற்குத் தேவையான சுகாதார வழிகாட்டல் தொகுப்பு நாடாளுமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்கவினால் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்கவிடம் சுகாதார வழிகாட்டல் தொகுப்பு நேற்று வெள்ளிக்கிழமை கையளிக்கப்பட்டது.

அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் சபா மண்டபத்திலிருக்கும் நேரத்தில் எப்பொழுதும் முகக்கவசத்தை அணிந்திருப்பது அவசியமானது என குறித்த சுகாதார பாதுகாப்பு வழிகாட்டல் தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபா மண்டபத்திலிருக்கும் நேரத்தில் முகக்கவசத்தை கழற்றவோ அல்லது கீழிறக்கவோ கூடாது என்றும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஜ-4)



பாராளுமன்றத் தேர்தல் - 2020

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்





பொங்குதமிழ் நாயகன்
இம்மானுவல் ஆனல்ட்
B.A (Phil) Hons,MSS Limra International (USA)
AMTC Limra International (USA)
[முதல்வர் யாழ் மாநகரசபை,
முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர்]

2

இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

தமிழ் இனத்தின் மாற்றத்திற்கான
பாராளுமன்ற பிரவேசம்

(C-104)



பாராளுமன்றத் தேர்தல் - 2020



வலிகாமம் கிழக்கு-கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் சமூக சேவைகள் உத்தியோகத்தராக ஏழு வருடங்கள் (2005 முதல் 2012 வரை) நிறைந்த சேவைகள் ஆற்றியவர். குறிப்பாக இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் சுயதொழில் ஓய்வூதியத் திட்டத்தில் 6500 பேரை இணைத்து பெரும் பணி புரிந்தவர்.

வேதநாயகம்
தபேந்திரன்
B.Com (Jaf), PGD.PDS(Jaf), M.A (Jaf)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

9

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட வாக்காளர்களே உங்கள் ஏகோபித்த ஆதரவை வழங்கி வெற்றி பெறச் செய்யுங்கள்

வலிகாமம் கிழக்கு - கோப்பாய் நலன் விரும்பிகள்.



பாராளுமன்றத் தேர்தல் - 2020



யாழ்ப்பாணம்-கிளிநொச்சி மாவட்டம்
வாக்காளப் பெருமக்களே
பல பொதுப் பணிகளையும் கல்வி சார் சேவைகளையும் அர்ப்பணிப்புடன் ஆற்றி வரும் வட அல்வை மண்ணின் பூர்வீக மைந்தனாகிய தமிழ்த்தேசிய கூட்டமைப்பு-தமிழரசு கட்சி சார்பில் போட்டியிடும் இளம் தலைமுறை வேட்பாளர் சமூக சேவை உத்தியோகத்தர்

வேதநாயகம்
தபேந்திரன்
B.Com (Jaf), PGD.PDS(Jaf), M.A (Jaf)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

9

இலக்கத்திற்கு புள்ளடியிட்டு அவர்களை வெற்றி செய்வோம்

வடமராட்சி அல்வாய் வடக்கு உறவுகள்



பாராளுமன்றத் தேர்தல் - 2020

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்




மலர் சின்னையா
(முன்னாள் அதிபர்-கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)

8


## வாக்கெடுப்பு மையமாகும் மோட்டார் போக்குவரத்து திணைக்களம்

(கொழும்பு)

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் வாக்கெடுப்பு மையமாக பயன்படுத்தப்பட உள்ளதனால் குறித்த திணைக்களத்தின் செயற்பாடுகளை நாளை மறுதினம் 4 ஆம் திகதி மற்றும் மறுநாள் நிறுத்தி வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. மோட்டார் போக்குவரத்து திணைக்களம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. (ஜ-4)

# நாட்டு நிலைமை மோசமாகும்

## தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

**கொரோனா அச்சத்தால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களை வாக்களிப்பு நிலையங்களுக்கு அழைத்துச் செல்லும் போது தேர்தல்கள் ஆணைக்குழு சுகாதார விதிமுறைகளை கடுமையாக பின்பற்ற வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

தேர்தல் நெருங்கி வரும் நிலையில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை தேர்தல்கள் ஆணைக்குழு இறுக்கமாகப் பின்பற்ற வேண்டும்.

இந்த விதிமுறைகளை பின்பற்றி தனிமைப்படுத்தல் நிலையங்களில் உள்ளவர்களை வாக்களிப்பு நிலையங்களுக்கு கொண்டு செல்வதில் எங்களுக்கு பிரச்சினையில்லை.

தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கும் வாக்களிப்பதற்கான உரிமையுள்ளது.

வாக்களிப்பின் போதும், வாக்குப்பெட்டிகளை வாக்குகள் எண்ணப்படும் நிலையங்களுக்கு கொண்டு செல்லும் போதும் கடுமையான நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

தனிமைப்படுத்தப்பட்டவர்களை விசேடமான ஒரு பகுதியிலேயே வாக்களிக்கச் செய்ய வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஜ-4)

# அலரிமாளிகையைப் பிடிப்பதே எங்களின் இலக்கு-மனோ

(கொழும்பு)

40 வருடங்கள் அமைச்சரவையில் பலமிக்க அமைச்சு பதவிகளை வகித்த மலையக அரசியல்வாதிகள் செய்யாத பல சேவைகளை தமிழ் முற்போக்கு கூட்டணி நான்கரை ஆண்டு காலப்பகுதிக்குள் செய்துள்ளது எனவும் அலரிமாளிகையை பிடிப்பதே தமது கட்சியின் இலக்கு எனவும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பில் பணிபுரியும் மலையக இளைஞர்களுடனான சந்திப்பு நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மலையகம் தொடர்பில் புதிய கனவுகளை நாம் காணவில்லை. நாம் கண்ட கனவுகள் கணிசமானவையை நிறைவேற்றி இருக்கிறோம்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகர் சௌமியமூர்த்தி தொண்டமான் முதல், அமரர் ஆறுமுகன் தொண்டமான் வரையில் 40 வருடங்களாக அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக இருந்திருக்கிறார்கள். சிறிகொத்தாவை பிடிப்பதே எமது இலக்கு என ஐக்கிய தேசிய கட்சியினர் கூறுகிறார்கள்.

ஆனால் எங்களது இலக்கு அலரிமாளிகையை பிடிப்பதே. எங்களின் இலக்கு மலையகத்தில் நிலையான அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கு பலமான ஆதரவு அவசியம். மலையக மக்கள் சிறந்த அரசியல் தீர்மானத்தை எடுப்பார்கள் என அவர் தெரிவித்தார். (ஜ-4)




## தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பிரச்சினை தொடர்பிலான கொள்கைகள்...

தேசிய மக்கள் சக்தி தேசியப் பிரச்சினைத் தொடர்பில் பின்வரும் தலைப்பின் கீழ் தனது கொள்கைகளை முன்வைக்கிறது. "பன்முகத்தன்மை மற்றும் சமத்துவத்துடன் பிணைந்துள்ள ஒரு இலங்கை நாடு" "அந்த திட்டத்தின் நோக்கங்கள், அதன் கீழான நடவடிக்கைகள் "சுதந்திரம் மற்றும் ஜனநாயகம்" "போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி" "நிலங்கள் மற்றும் வீடுகள்" "குடியேற்றங்களை நிறுவுதல்" "மொழி" "தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம்" ஆகிய தலைப்புகளின் கீழ் தேசிய மக்கள் சக்தி தனது வேலைத் திட்டத்தை முன்வைத்திருக்கிறது

அவற்றின் சில...

- ✓ அனைத்து தேசிய இனங்களின் சமூக, கலாசார, மத, பொருளாதார, மொழியியல் மற்றும் அரசியல் பன்முகத்தன்மையையும் அவர்களின் உரிமைகளையும் அங்கிகரித்து மதிக்கும் மக்கள் சமூகத்தை உருவாக்குதல்.
- ✓ அனைத்து தேசிய இனங்கள் மற்றும் மத குழுக்களுக்கிடையே பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் நம்பிக்கையை உறுதிப்படுத்துதல், அனைவரின் பாதுகாப்பையும் உரிமைகளையும் உறுதி செய்தல்.
- ✓ இலங்கை தேசமாக செயற்படும்போது அனைத்து தேசிய இனங்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதோடு அவர்களின் அரசியல் அபிலாசைகளையும் குறிக்கோள்களையும், பிரதிநிதித்துவப்படுத்தும் அதேவேளையில் அனைத்து சமூககங்களினதும் சமூக நிர்வாக பங்களிப்பை உறுதிச்செய்தல்.
- ✓ இன, சாதி, மற்றும் மத தீவிரவாதம் இல்லாமல் ஒற்றுமையுடன் செயல்படும் ஒரு சமூகத்தை உருவாக்குதல்.
- ⌘ அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்தல்.
- ⌘ சட்டரீதியான தடைகள் இல்லாமல், சுதந்திரமாக வாழ்வதற்கு அவர்களுக்கு முழு பாதுகாப்பையும் ஒத்துழைப்பையும் வழங்குதல்.
- ⌘ போரின்போது அனைத்து தரப்பினரும் செய்த குற்றங்களை விசாரிக்க ஒரு உண்மை ஆணையத்தை நிறுவுதல்.
- ⌘ விதவைகள் மற்றும் அனாதைகள் மற்றும் ஊனமுற்றோரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.
- ⌘ போருக்கு முன்னர் மக்களுக்கு சொந்தமான அனைத்து நிலங்களையும் வீடுகளையும் அவற்றின் உரிமையாளர்களுக்கு மற்றுவதற்கு இழப்பீடு வழங்குதல்.
- ⌘ மகாவலி அதிகாரச் சட்டம் மற்றும் பிற திட்டங்களின் கீழ் காலனித்துவ பிரச்சினைகளைத் தீர்க்க ஒரு சிறப்பு பொறிமுறையை நிறுவுதல்.
- ⌘ இலங்கை குடிமக்களின் சிங்கள, தமிழ், மற்றும் ஆங்கில மொழிகளை தேசிய மொழிகளாக நிறுவுவது, மொழியின் மீதான அழுத்தங்களை ஒழிப்பதற்கும், எந்தவொரு மொழியிலும் செயல்படுவதற்கான குடிமக்களின் உரிமையை ஏற்றுக்கொள்வதற்கும், மொழி காரணமாக இருக்கும் சிரமங்களை களைவதற்கான நடவ்டிக்கை எடுத்தல். போன்ற......



## மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர்

### தோழர் அனுர குமார திசநாயக்கா அவர்களின் செய்தி

பெயரளவிலான சுதந்திரம் பெற்று 72 வருடகாலமாக தொடர்ந்தும் வடக்கு கிழக்கு மக்கள் உள்ளிட்ட அனைத்து மக்களும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு ஆட்சியாளர்களை நியமித்து உங்களது விடுதலையை, சுதந்திரத்தை, உரிமைகளை பெற்றுக்கொள்வதற்காக முயற்சித்தாலும் பதவியேறியதும், அனைத்து ஆட்சியாளர் களைப் போன்றே கோத்தாபய அரசாங்கமும் ஒரு சில மாதங்களுக்குள் மக்களை ஏமாற்றி வருவது கண்கூடாகத் தெரிகின்றது.

அதேபோன்று ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான அரசாங்கமும் கடந்த காலத்தில் நாட்டை பொருளாதார ரீதியில் அழிவுப்பாதைக்கு இட்டுச் சென்றதைப் போன்று, இந்த அரசாங்கமும் வரிச்சுமை, விலைவாசி அதிகரித்தல், நாட்டு வளங்களை தனியார்மயப்படுதல் என்ற பெயரில் தாரை வாரக்கின்றது. தம்மைச் சூழவுள்ளோருக்கு ஊழல் மலிந்த சுகபோக சொகுசு வாழ்க்கைக் கான சந்தர்ப்பங்களை வழங்குவதையே காணமுடிகிறது.

அதேபோன்று வடக்கு கிழக்கு மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் அரசியற் கட்சிகளும் தேர்தல் காலங்களில் வீரவசனங் களை பேசி உங்களது வாக்குகளை பெற்றுக் கொண்டு பதவியேற்ற பின்பு, வாக்களித்த உங்களுக்காக காத்திரமான எதையுமே செய்யவதில்லை. இது காலம் காலமாக நடைபெறுகின்றது. அதே பாணியில் தற்போது சில புது முகங்களும் இம்முறை தேர்தலில் போட்டியிடுவதை காணமுடி கின்றது. இவர்களும் எதிர்காலத்தில் மக்களுக்காக எதையுமே செய்ய மாட்டார் கள் என்பது உறுதியாகும்.

எனவே நாடு இவ்வளவு காலமும் சிக்குண்டிருக்கும் அழிவுப்பாதையிலிருந்து விடுவித்து உண்மையான அமைதி, சுதந்திரம், ஜனநாயகத்தை உறுதிபடுத்தி, பொருளாதார ரீதியில் கட்டியெழுப்பி, மக்கள் பணத்தின் பிரதிபலன்களை மக்களுக்கே உரித்தாகும் ஆட்சியை உருவாக்குவது நம் அனைவரதும் கடமையாகும்.

**அதற்கான அடித்தளமாக இம்முறை தேர்தலில் தேசிய மக்கள் சக்தியிக்கு குறிப்பிடத்தக்க பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொடுப்பதற்காக**

**திசைகாட்டி சின்னத்திற்கு**

**வாக்களிக்கும்படி**
**அன்போடு**
**கேட்டுக்கொள்கிறோம்.**

## குடும்பத்தில் ஒரு வாக்கு



யாழ் மாவட்டத் தலைவர்
**இராமலிங்கம் சந்திரசேகர்**

அன்பாந்த தமிழ் உறவுகளே. இலங்கை நாட்டுக்கு சர்வசன வாக்குரிமை கிடைத்து இன்று 90 வருடங்களாகிறது. 90 வருடங்களாக நாங்களும் எமது முன்னோர்களும் யாருக்காவது வாக்களித்திருக்கின்றோம். ஆடசியாளர்களை உருவாக்கியிருக்கின்றோம். எமது வாக்குகளால் பாராளுமன்றம் செல்ல எம்மவர்களும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள். ஆனால் எமது பிரச்சினைகள் எதற்கும் தீர்வில்லை. இனியும் தீரக்கப்போவதில்லை. எனவே எதிர்வரும் 05ஆம் திகதிக்குப் பின்னர் வரபோகின்ற அரசாங்கம் மக்களை வதைக்கின்ற, குடும்ப, சர்வாதிகாரப் போக்குடைய அரசாங்கமாகவே இருக்கப்போகிறதென்பதை இப்போது எதிர்வு கூறியுள்ளது. அதனால் மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களின் தேவை அதிகரித்துள்ளது அதாவது உருவாகப்போகும் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக முகம் கொடுக்க கூடிய ஒரே கட்சி தேசிய மக்கள் சக்தியாகும் அதனால் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் உங்களின் குடும்பத்தில் ஒரு வாக்கை திசைகாட்டிக்கு பெற்றுத் தருமாறு அன்புடன கேட்டுக்கொள்கின்றேன்.

## வறுமை நிலையிலிருந்து மீள வேண்டும்



கிளி மாவட்டத் தலைவர்
**இளையதம்பி கணேஷப்பிள்ளை**

எமது கிளிநொச்சி மாவட்டம் என்பது பன்முகத்தன்மையை கொண்டுள்ள. விவசாய நிலமாகும். அது இன்று மிகவும் பின்தங்கிய மாவட்டமாக மாற்றப்பட்டுள்ளது. யுத்தத்ததின் போர் காயங்கள் இன்றும் ஆறாத மக்கள், வறுமை கூடிய, அனாதைகள், விதவைகள், பெண்கள் தலைமையிலான குடும்பங்கள், என பல்வேறு நெருக்கடிகளை சந்தித்து வருகிறது. பாராளுமன்றத்திற்கு செல்லத் தயாராகும் எம் தலைவர்கள் பிரதேச, சாதி, மத அடிப்படையில் மக்களை பிரிக்க முனைகிறார்கள். இவற்றிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய தேவை அதிகரித்துள்ளது. அதேபோன்று எதிர்காலத்தில் உருவாகப்போகும் அரசாங்கத்திற்கு எதிராக வலுவான எதிர்க்கட்சி ஒன்று தேவைப்படுகின்றது அதை வகிக்கக்கூடிய ஒரே அணி தேசிய மக்கள் சக்தியாகும் அதனால் எமது பிரச்சனைகளின் குரலாக பாராளுமன்றத்தில் ஒலிப்பதற்கான உண்மையான மனிதர்களே எமக்கு தேவைபப்டுகிறது. அதனால் திசைகாட்டியைப் பலப்படுத்துவோம்.

## வந்தோரை வாழவைத்த வன்னி நிலம்



மன்னார் மாவட்டத் தலைவர்
**லெம்பெட் சவேரியன் சந்தியோகு**

வந்தாரை வாழவைத்த வன்னித் தாய் இன்று கண்ணீர் வடிக்கிறாள். இலங்கையில் வறுமை நிலையில் வாழும் மக்கள் கூடுதலாக வாழ்வது வன்னி நிலத்திலாகும். மைக்ரோ பினன்ஸ் நிறுவன கடன் காரணமாக அதாவது வாங்கிய கடனைத் திருப்பி செலுத்த முடியாது தற்கொலை செய்து கொள்வதில் முதலிடம் வகிப்பது எமது நிலமாகும் அதேபோன்று சமூக, பொருதார, கலாசார நெருக்கடிகள் உக்கிரமடைந்துள்ளது. எமது விவசாயம், கடற்றொழில் அனைத்தும் பின்நோக்கியே சென்று கொண்டிருக்கிறது. ஆகவே இந்தத் தேர்தலில் எமக்குத் தேவைப்படுவது எமக்காக பாராளுமன்றத்தில் குரல் கொடுக்கும் உண்மையான மனிதர்களாகும். அந்த மனிதர்களை கொண்ட இயக்கமே தேசிய மக்கள் சக்தியாகும். அதனால் திசைகாட்டியின் மூலமாக வரும் பாராளுமன்ற உறுப்பினர்களை அதிகரிப்போம் அதற்காக வன்னி நிலத்திலிருந்து தோள்கொடுக்க நான் தயார்.

ජාතික ජන බලවේගය | National Peoples Power | தேசிய மக்கள் சக்தி

திசைகாட்டி தேர்தல் சிறப்பு இதழ்

## இராமலிங்கம் சந்திரசேகர்
யாழ் மாவட்ட குழுத் தலைவர்
077 779 5958



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்றத்தின் பிரதிக்குழுக்களின் தவிசாளராகவும், பாராளுமன்றத்தின் இந்திய அகதிமுகாம்களில் வாழும் இலங்கையர்களுக்கு பிரஜா உரிமையை பெற்றுக கொடுப்பதற்கான தெரிவுக்குழுவின் தவிசாளராகவும் செயற்பட்ட இவர் தற்போது மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினராகவும் , யாழ்மாவட்ட அமைப்பாளவாகவும் செயற்படுகின்ற இவர் இம்முறை பொதுத்தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் சார்பாக யாழ்மாவட்ட முதன்மை வேட்பாளராக களமிறங்கியுள்ளார்

3

## இளையதம்பி கணேஷப்பிள்ளை
077 359 4424



கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த இவர் 1969 ஆம் ஆண்டு முதல் மக்கள் விடுதலை முன்னணி யின் முழுநேர உறுப்பினராக செயற்பட்டவரா வார். இவர் இடதுசாரிய முற்போக்குச் சிந்தனை யாளராவார். அதேபோன்ற கிளிநொச்சி மாவட் டத்தில் பல்வேறு தொண்டு நிறுவனங்களில் தலைவராகவும் செயற்பட்டு மக்களின் நன்மதி ப்பை பெற்றுள்ள இவர் 2020 நடை பெறவுள்ள பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் களம் புகுந்துள்ளார்.

4

## அருட்சோதி சிவயோகவதி
077 187 5161



யா/எழுதுமட்டுவாழ் அ.த.க. பாடசாலை யின் பழைய மாணவியாகிய இவர் பல்வேறு மகளீர் அமைப்புக்களில் செயற்படுபவர். பெண்ணிய சிந்தனையின் சிகரமாவார். பெண்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்காக குரல் கொடுத்துப் போராடும் போர்குணம் படைத்த இவர் 2020 நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் பெண்களின் குரலாக தேசிய மக்கள் சக்தியின் சார்பில் புகுந்துள்ளார் களம்

1

## ஞானமுத்து அன்ரன் சாள்ஸ்
077 978 9230



தற்போது தீவக கல்வி வலயம் கரம்பொன் சண்முகநாத ம.வி. இல் விஞ்ஞான ஆசிரியராக பணிபுரியும் இவர், இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் வட மாகாண தலைவராக செயற்படுவதோடு, அதிபர் - ஆசிரியர்களின் உரிமை போராட்டத்தில் முன்னின்று செயற்படுபவராவார். இவர் தமது ஆரம்ப மற்றும் இடைநிலை கல்வியை கிளிநொச்சி மாவட்டத்தில் பயின்றதுடன் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி, முதுதத்துவ மாணி, மற்றும் கல்வி முதுமாணி பட்டங்களை பெற் றுள்ளதுடன் இவர் பன்முக ஆளுமை கொண்ட சிறந்த தலைமைத்துவ பண்புடன் 2020 இல் பாராளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் சார்பாக யாழ் மாவட்ட

7

## அருந்தவராசா தனீஸ்
077 961 7722



நீர்வேலியை பிறப்பிடமாக கொண்ட தனீஸ் யாழ்ப்பாண மத்தியக் கல்லூரியில் கல்வி கற்றவரா வார். மேலும் பல்வேறு சமூகத் தொண்டு நிறுவனங் களிலும், இளைஞர் விளையாட்டு கழகங்களிலும் சங்க உறுப்பினரும் மற்றும் நீர்வேலி வாழைக்குலை சங்கத்தின் உறுப்பினராகவும், இருக்கின்ற இவர் கோவில் தொண்டர் சேவையிலும் விவசாய பணியாற்று வதில் சிறந்து விளங்கும் தனீஸ் 2020 நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் களம் புகுந்துள்ளார்.

2

## தேவராசா கீதாலயன்
077 668 8151



யா/அச்சுவேலி மத்திய கல்லூரியின் பழைய மாணவ ராகிய இவர் சிறந்த வர்த்தகரும் சமூக ஆர்வலரும் ஆவார். இடதுசாரிய சிந்தனையுடைய இளம் தலைமை த்துவ பண்புடைய கீதாலயன் தற்போது இளம் சமூகத் தினருக்கு பாரிய பேரழி வினைக் கொண்டுவருகின்ற போதைப் பொருளுக்கு எதிராகவும் இளைஞர்களை நல்வழிப்படுத்துகின்ற நடவடிக்கையிலும் வடபகுதி வாழ் விவசாயிகளின் உரிமைகளுக்காக அகில இலங்கை விவசாய சம்மேளனத்தின் யாழ் மாவட்ட இணைப்பாளராக செயற்படும் கீதாலயன் 2020 நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் இளைஞர் களின் குரலாக களம் புகுந்துள்ளார்.

8

## கருப்பையா பிரான்ஸிஸ் ஜோசப்
077 929 0790



கிளிநொச்சி மாவட்டத்தின் பாரதிபுரம் வடக்கை வதிவிடமாகக் கொண்ட இவர், வடக்குக் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும், பாரதிபுரம் வடக்கு கிராம அபிவிருத்தி சங்கத்தினதும் கமக்கார குழுவினதும் தற்போதைய தலைவராக பணியாற்றும் இவர். 2020 நடைபெற வுள்ள பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டி யிடுகின்றார்.

5

## பெ. ஸ்ரீகந்தநேசன் (புயல்)
077 968 1333



இலக்கியத்தில் ஜனாதிபதி விருது பெற்றவர். பாடசாலைக் கல்வியை மு/மாங்குளம் ம.வி. திலும் வ/வவுனியா தமிழ் ம.ம.வி. திலும் கற்று, உயர் கல்வியை யாழ் - பேராதனை பல்கலைக்கழகங்களில் நிறைவு செய்து, தற்போது யா/நாவற்குழி ம.வி. இல் ஆசிரியராக பணிபுரியும் புயல்நேசன் அவர்கள், இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் வடக்கு மாகாண செயலாளராக செயற்படுவதோடு, அதிபர் - ஆசிரியர்களின் உரிமை போராட்டத்தில் முதன்மை யானவ்ராக திகழ்கிறார். சிறந்த இலக்கியவாதியாகவும், ஊடகவியலாளர், சர்வதேச தமிழியல் ஆய்வாளர், சமூகத் தொண்டர் என பல முகம் கொண்டவர். தாய்மொழிக்கலை மன்றத்தின் செயலாளர். சிறந்த தலைமைத்துவ பண்புடன் முதுதத்துவமாணியாக, 2020 இல் பொதுத் தேர்தலில் தேசிய சக்தியின் சார்பாக யாழ் மாவட்ட வேட்பாளராக களம் புகுந்துள்ளார்.

9


## கிருஸ்ணப்பிள்ளை சிவானந்தன்
077 967 2209



தற்போது, யா/ஸ்ரீ ' கணேசா வித்தியாலயத்தில் பணிபுரியும் கி. சிவானந்தன் அவர்கள், இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் தென்மராட்சி வலய அமைப்பளராக செயற்படுவதோடு, அதிபர் - ஆசிரியர்களின் உரிமைக்கு குரல் கொடுப்பவர். வட்டுக்கோட்டைப் பகுதியில் சில காலம் சமூர்த்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றி, அப்பிரதேச மக்களின் நன் மதிப்பைப் பெற்றவர். கலைமாணியாகிய இவர் தமிழ் ஆசான், 2020 இல் பொதுத் தேர்தலில் தேசிய சக்தியின் சார்பாக யாழ் மாவட்ட வேட்பாளராக களம் புகுந்துள்ளார்.

6

காணா…
நியாய…



காணாமலாக்… தெரிவிப்ப தற்கும்… என்றும் பாராளு… மக்கள் விடுதலை… ரத்நாயக்க தெரிவி…

எமது நாட்… இடம்பெற்று… காணாமலாக்கப்… கிடைக்கவில்லை… கிடைக்க வேண்… காணாமலாக்கப்… ஆரம்பிப்பதற்கா… காணாமலாக்கப்… அவர்களுக்கு நிய… அரச இராணுவ… இராணுவ சட்ட… கொண்டவர்களுக்… முகம்கொடுக்கத்… தண்டனை கிடை…

உலகளவிலும்… அனுபவங்கள் இ… Reconciliation… ரணில், மைத்தி… அதிகாரத்தை… இழுத்தடித்துச் செ…

தென்னாபிரிக்… தகவல்களை சே… மற்றும் மீளமைப்… காரியாலயங்கள்… தொடர்பான கமி… நீதிமன்ற கமிட்டி… நியாயம் கிடைக்… தமது ஆதங்கங்… அதற்கான தீர்வுக…

எனவே சில அ… முடிகிறது. எனவே… இப்பிரச்சினையை… இனவாதத்தை… நல்லிணக்கத்தை… கேட்டுக்கொள்கிறே…

சாஹ…
077 4…



# காணாமலாக்கப்பட்டோருக்கு நியாயம் கிடைக்கவேண்டும்!



காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்கங்களுக்கு தமது ஆதங்கங்களை தெரிவிப்ப தற்கும் அவர்களது குடும்பங் களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்றும் பாராளுமன் றத்தில் கொண்டுவரப்பட்ட பிரேரணையின் போது மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் தோழர் பிமல் ரத்நாயக்க தெரிவித்த சில கருத்துக்கள் கீழ்வருமாறு.

எமது நாட்டில் சுமார் 30 வருடகாலமாக பயங்கர யுத்தமொன்று இடம்பெற்றது நம் அனைவருக்கும் தெரியும். அதில் பலர் காணாமலாக்கப்பட்டனர் என்பதும் அவர்களுக்கு உரிய நியாயம் கிடைக்கவில்லை என்பதும் உண்மையாகும். எனவே அவர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என நாம் உறுதியாக இருக்கிறோம். அதற்காகவே காணாமலாக்கப்படோரின் தகவல்களை தெரிவிப்பதற்கான காரியாலயத்தை ஆரம்பிப்பதற்கான ஆதரவை நாம் வழங்குகிறோம். இலங்கையில் காணாமலாக்கப்பட்டோரில் பெரும்பாலானவர்கள் தமிழர்களே ஆவர். அவர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். அரச இராணுவம் நடந்துகொள்ள வேண்டியது, நாட்டின் சட்டத்திற்கும் இராணுவ சட்டத்திற்கும் அமையவாகும். அந்த சட்டங்களுக்கு ஏற்ப நடந்து கொண்டவர்களுக்கு இக்காரியாலயத்தை ஆரம்பிப்பதால் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கத் தேவையில்லை. அவற்றுக்கு மாறாகச் செயற்பட்டவர்களுக்கு தண்டனை கிடைக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

உலகளவிலும் இவ்வாறான அலுவலகங்களை திறந்து வைக்கபட்ட பல அனுபவங்கள் இருக்கின்றன. அவற்றுள் தென்னாபிரிக்காவில் Truth and Reconciliation Commissionஐ விசேடமாக குறிப்பிடலாம். இதைப்பற்றி இதில். மைத்திரி அரசாங்கம் பல்வேறு தடவைகள் கதைத்தாலும் அதிகாரத்தை வைத்துக்கொண்டும் இப்பிரச்சினையை தீர்ப்பதற்கு பதிலாக இழுத்தடித்துச் செல்வதையே அவதானிக்கிறோம்.

தென்னாபிரிக்காவில் இக்காரியாலயத்தை ஆரம்பித்து அதனூடாக பல தகவல்களை சேகரிப்பதற்கு முடிவெடுத்தார்கள். முக்கியமாக " உண்மை மற்றும் மீளமைப்பு ஆணைக்குழுவின் கீழ் பிரதானமாக 4 கமிட்டிகளுக்கான காரியாலயங்கள் அமைக்கப்பட்டன. அவை மனித உரிமைகள் மீறல் தொடர்பான கமிட்டி, ஷமா கமிட்டி, நஷ்டஈடு, புனர்வாழ்வு கமிட்டி மற்றும் நீதிமன்ற கமிட்டியாகும். இவற்றினூடாக எமது மக்களுக்கு நூறு சதவீத நியாயம் கிடைக்காவிட்டாலும் காணாமலாக்கபட்ட, பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமது ஆதங்கங்களை உத்தியோகபூர்வமாக தெரிவிப்பதற்கும் அதன்பின் அதற்கான தீர்வுகளை பெற்றுக்கொள்ளவும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது.

எனவே சில அமைச்சர்கள் இனவாத ரீதியில் செயற்படுவதை அவதானிக்க முடிகிறது. எனவே அவற்றை முற்றாக நிறுத்த வேண்டும் என கோருவதோடு இப்பிரச்சினையை தீர்ப்பதற்கு எமது முழு ஒத்துழைப்பையும் வழங்குவதோடு இனவாதத்தை தோற்கடித்து எமது நாட்டில் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் படியும் கேட்டுக்கொள்கிறோம்.

## சாஹுல் ஹமிட் மாஹீர்
077 401 0316



**10**

யா/டிறிபேக் கல்லூரியின் பழைய மாணவரும் யாழ் மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும் ஆகிய, சாஹூல் ஹமிட் மாஹீர் சிறந்த சமூக செயற்பாட்டாளர் ஆவார். போர்க் காலத்தில் யாழ் மாநகர சபை உறுப்பினராக இருந்து அநீதிக்கு எதிராக துணிச்சலுடன் செயற்பட்ட இவர் அண்மைக்காலமாக ஆளும் தரப்பினரால் 'கட்டவிழ்த்து விடப்படுகின்ற இனவாத மதவாத நடவக்கைகளுக்கு எதிராக விசேடமாக முஸ்லிம் மக்களுக்கு எதிராக இனவாதம் கட்டவிழ்த்து விடப்படும் போது தேசிய மக்கள் சக்கதியோடு இணைந்து இன, மத நல்லிக்கத்திற்காக துணிச்ச லோடு குரல் கொடுக்கும் மாஹீர் அவர்கள் 2020 நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் களம் புகுந்துள்ளார்.

## உபாலி சமரசிங்க
077 908 0255

தோழர் உபாலி சமரசிங்க வவுனியா தெற்கு பிரதேச சபையின் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினராக செயற்படுவதோடு மக்கள் விடுதலை முன்னணியின் வவுனியா மாவட்ட அமைப்பாளராகவார். தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்காக செயற்படுகின்றதோடு இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட குழுத்தலைவராகவும் களமிறங்கியுள்ளார்.



**5**

## அநுர சந்திரசிறி
077 835 4244

இவர் வவுனியா கோகஸ்வெல பகுதியில் மக்கள் விடுதலை முன்னணியின் அமைப்பாளராவார். இவர் கல்வி ஆசிரியர் கூட்டுறவுச் சங்கத்தின் வடமாகாண அலுவலகத்தில் முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றி வருகின்றார்.



**1**

## ரஞ்சித் பண்டார
071 366 8336

இவர் தேசிய நீர் வழங்கல் மற்றும் வழகால் அமைப்பு சபையில் பணிபுரிவதோடு அந்நிறுவனத்தின் தொழிற் சங்கத்தின் வடமாகாண நிறைவேற்றுக் குழவில் அங்கத்தவராகவும் செயற்படுகின்றார்.



**2**

## பஞ்சலிங்கம் இராமசாமி
077 844 3205

வவுனியா மாவட்டத்தின் வாரிக்குட்டியூரை வதிவிடமாகக் கொண்ட இவர், கிராம அபிவிருத்தி சங்கத்தினதும் கமக்கார குழுவினதும் தற்போதைய தலைவராக பணியாற்றும் இவர். 2020 நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிடுகின்றார்.



**6**

## செல்வநாயகம் கருப்பையா
077 507 3281



**3**

1980 காலகட்டத்திலிருந்து இன்று வரை மக்கள் விடுதலை மன்னணியின் அங்கத்தவராக செயற்படும் தோழர் செல்வநாயகம் பல சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருவதோடு இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி சார்பாக போட்டியிடுகின்றார்.

## லெம்பெட் சவேரியன் சந்தியோகு
071 866 1989

யாழ். பல்கலைக்கழகத்தில் வணிகமாணி மற்றும் முதுகல்விமாணி பட்டங்களைப் பெற்று கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்விமாணி பட்டம் பெற்றுள்ள இவர் மன்னார் வண்ணாமோட்டை அரச தமிழ் வித்தியாலயத்தின் அதிபராவார்.



**7**

## காமினி ஜயவர்த்தன
077 648 9980



**8**

பல்வேறு சமூகப் பணிகளிலும் ஈடுபடும் காமினி தோழர் மடுவராயர் கட்டையடம்பன் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் முன்னாள் தலைவராக கடமையாற்றியுள்ளதோடு தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்கும் செயற்படுபவராவார்.

## கௌசிகா கலைச்செல்வம்
(ஜோதிடர் அபி ஷர்மா)
077 667 8222

வவுனியா உயர் தொழில்நுட்பக் கல்லூரியில் சிவில் இன்ஜினியரிங் டிப்ளோமா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவம், மனித உரிமைகள் தொடர்பான டிப்ளோமா உள்ளிட்ட டிப்ளோமா கல்வி கற்றுள்ளதோடு தேசிய மக்கள் சக்தியில் வவுனியா மாவட்ட அங்கத்தவராக கடமையாற்றி வருகின்றார்.



**4**

## பத்மசிறி ஜயநாத
071 822 7278

பேராதனை பல்கலைக்கழகத்தில் விவசாயத்துறையில் கௌரவ பட்டமும், மிகிந்தலை ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் திட்டமிடல் முகாமைத்துவ பட்டமும், யப்பான் ஜெயிகா நிறுவனத்தில் மரக்கறி விதை உற்பத்தி தொடர்பான விசேட பயிற்சியும் பெற்ற இவர் மகாவலி எல் வலையத்தில் முன்னாள் வதிவிட திட்டமிடல் பணிப்பாளராவார்.



**9**

# மக்கள் விடுதலை முன்னணியின் வரலாற்றுப் பதிவுகள்



## தேசிய கீதம் மூலம் மீண்டும் தனிநாட்டுப் போருக்கு வழிவகுக்காதீர்

### தமிழில் பாடவிடுங்கள் என்கிறார் அநுர

தனிநாடு கோரி முப்பது வருடங்களாக ஆயுதம் ஏந்திப் போராடிய தமிழர்கள், 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதிப் போருடன் அந்தக் கோரிக்கையை கைவிட்டுவிட்டார்கள். அவர்கள் தற்போது பிளவுபடாத ஒருமித்த நாட்டுக்குள்தான் தங்கள் உரிமைகளைக் கேட்டு ஜனநாயக வழியில் போராடி வருகின்றார்கள். இவ்வாறான

இலங்கையின் சுதந்திர தின நிகழ்வில் இம்முறை சிங்கள

தேசிய மொழி. அது அரச கரும மொழி. எனவே, சிங்களத்துடன் தமிழிலும் தேசிய கீதம் பாடுவதில் என்ன பிரச்சினை இருக்கின்றது? என்ன முரண்பாடு இருக்கின்றது? சுதந்திர தினத்தில் கட்டாயம் தமிழிலும் தேசிய கீதம் பாடப்பட வேண்டும்.

தமிழர்களைப் புறக்கணிக்கும் வகையிலும் தமிழ் மொழியை



நேர்காணல்

## இறந்தவர்களை நினைவுகூர மறுதலிக்கும் அரசாங்கம் ஓர் அரசாங்கமா?



பாராளுமன்றத்தில்

## லொட்ஜ்களில் இருந்து தமிழர்களை வெளியேற்றித்தான் கொழும்பின் பாதுகாப்பை பலப்படுத்த வேண்டுமா?


வட மாகாணத்தில்

காணி, இயற்கை சூழலை சூறையாடுவதைத் தோற்கடிப்போம்!

தேசிய மக்கள் சக்தி



இளைஞர்கள் அழிவுப் பாதையில் மக்களே,

போதை வஸ்து, மதுபானம் வழங்கும் அரசியல்வாதிகளைத் தோற்கடிப்போம்!

தேசிய மக்கள் சக்தி


## மக்கள் விடுதலை முன்னணியின் வரலாற்றப்பதிவு

### 27.11.2009 அன்று இராமலிங்கம் சந்திரசேர் அவர்கள் நீதி அமைச்சருக்கு அனுப்பிய கடிதம்

வன்னிச்சமரில் காணாமல் யோய் மற்றும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டள்ளவர்களின் விவரங்களை வெளியிடுமாறு வலிறுத்தியுள்ள ஜே.வி.பி.நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் இது தொடர்பில் நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சு மிலிந்த மொரகொடவுக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

இது தொடர்பில் அக்கடிதத்தில் தெரிவிக்கப் பட்டிருப்பவை வருமாறு:

வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் கோரப்பிடியில் இருந்து உயிர் தப்புவதற்காக வன்னி மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு இடம்பெயர்ந்தனர். இவ்வாறு இடம்பெயர்ந்த மக்களில் அநேகமானோர் தமது பிள்ளைகளைத் தவறவிட்டுவிட்டு தவிக்கின்றனர்.

இவர்கள் தமது பிள்ளைகள் பற்றிய தகவல்களை அறிவதற்காக பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பில் எம்மைவிட நீங்களே அறிந்தி ருப்பீர்கள்.

இவ்வாறாகப் பிள்ளைகளைத் தவறவிட்டுத் தேடியலையும் பெற்றோரில் சிலருக்கு அவர்களது பிள்ளைகள் தடுப்பு முகாம்களில் இருக்கின்றனர் என உறுதியற்ற தகவல்கள் கிடைக்கின்றன என்றும் அவற்றின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துமாறும் என்னிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளு மன்ற உறுப்பினர் என்ற வகையில் பிள்ளை களைத் தவறவிட்டு நிற்கும் பெற்றோரின் வேண்டு கோளுக்கு முதலிடம் வழங்கி, அவர்களுக்கு உதவ வேண்டியது எனது கடமையாகும்.

நீதியமைச்சர் என்ற வகையில் தங்களது அதிகாரத்திற் குட்பட்ட நிலையங்களே புனர் வாழ்வு - தடுப்பு முகாம்களாகும். எனவே, கீழ் வரும் விவரங்களைக் கொண்டவர்கள் குறித்த முகாம்களில் தடுத்துவைக்கப் பட்டுள்ளனரா என்பதை அறியத் தருமாறு வேண்டுகின்றேன்.

விவரங்கள் வருமாறு

இராஜசேகரம் பிரியா, இவர் கடந்த வருடம் நவம்பர் 02இல் பூநகரியில் இராணுவத்தினிடம் சரணடைந்தார் எனவும், இவர் தற்போது களுத்துறை மகாவித்தியால யத்தில் உள்ள புனர்வாழ்வு முகாமின் இரண்டாம் மாடியில் 112ஆம் இலக்கத்தில் தடுத்துவைக்கப் பட்டுள்ளார் என்றும்,

லோகேந்திரம் ராசேந்திரன் (வயது-23) இவர் இவ்வருடம் ஜனவரி 22இல் சிலாவத்தையில் வைத்து இராணுவத்தி னரிடம் சரணடைந்தார் என்றும் தற்போது களுத்துறை அல்லது பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டள்ளார் என்றும்;

ஜெயக்கொடி இன்புருபன், இவர் கடந்த வருடம் பெப்ரவரி 20-22 ஆம் திகதிகளில் கிளிநொச்சி வன்னேரியில் வைத்து கைதுசெய்யப்பட்டு தற்போது பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டள்ளார் என்றும்,

ஜெயக்கொடி இன்பருபன் இவர் கடந்த வருடம் பெப்ரவரி 20-22ஆம் திகதிகளில் கிளிநொச்சி வன்னேரியில் வைத்து கைது செய்யப்பட்டு தற்போது பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்றும்,

கனகரத்தினம் யசோ (வயது-16) கட்டுப்பாட்டப் பகுதிக்கு வரும் போது ஷெல் வீச்சால் காயம்பட்ட இவர் இராணுவத்தினரால் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு தற்போது பூந்தோட்டம் தடுப்புமுகாமில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் பெற்றோர் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் குறித்த விபரங்கள் பெற்றுத்தருமாறு வேண்டுகின்றேன். என்று அதில் உள்ளது.

# பாரபட்சம் காட்டாத பொதுப்பணிகள்





# பிரேமதாஸ யுகம் மீண்டும் தலைதூக்க இடமளிக்க முடியாது

## பிரதமர் கூறுகிறார்

(கொழும்பு)

**கொடுங்கோல் ஆட்சி செய்ய பிரேமதாஸ யுகம் மீண்டும் தலை தூக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது. தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு அனைத்து இன மக்களும் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும், நல்லிணக்கத்துடனும் வாழும் சூழல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான எமது ஆட்சியில் உறுதிப்படுத்தப்படும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.**

எம்பிலிபிட்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ ஆட்சிக்காலத்தில் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் பலர் சித்திரவதைகளுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்கள். அரசியலுக்கும் மாணவர்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லாத நிலையில் மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டமை கொடூரமான செயற்பாடாக கருத வேண்டும்.

1988-99ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒவ்வொரு பிரதேசத்திலும் 1000இற்கும் மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டார்கள்.

ஆகவே இவ்வாறான கொடிய பிரேமதாஸ யுகம் மீண்டும் தலை தூக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது.

தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு அனைத்து இன மக்களும் சுதந்திரமாகவும், தேசிய நல்லிணக்கத்துடன் கௌரவமான முறையில் வாழும் சூழல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான எமது ஆட்சியில் உருவாக்கப்படும்.

மக்கள் எம்மீது கொண்டுள்ள நம்பிக்கைக்கு ஒருபோதும் பாதிப்பினை ஏற்படுத்தமாட்டோம் என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# குணமடைந்தோர் 2439

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 439 ஆக அதிகரித்துள்ளது என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. புதிதாக நேற்று 48 பேர் குணமடைந்து வைத்தியசாலைகளில் இருந்து வெளியேறி வீடு திரும்பியுள்ள நிலையில் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

அந்த வகையில் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டதாக அடையாளம் காணப்பட்ட 2815 பேரில் தற்போது 365 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதேவேளை கொரோனா தொற்றினால் இதுவரை 11 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)













பாராளுமன்றத் தேர்தல் - 2020

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்



கனகரட்ணம்
சுகாஷ்
(சட்டத்தரணி)

2 10 1

இரு தேசங்கள்..!
ஒரு நாடு..!

- 2003: யாழ்ப்பாணக் கல்லூரியின் மாணவத் தலைவன்.
- 2005: யாழ் பல்கலைக் கழகச் சட்ட மாணவர் சங்கத்தின் முதலாவது தலைவன்.
- வித்தியா படுகொலை, ரெஜினா படுகொலை போன்ற நூற்றுக்கும் அதிகமான வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்களுக்காக முதன் முதலில் களமிறங்கியவன்.
- பயங்கவாதத் தடைச் சட்ட வழக்குகளில் சிக்கிய அப்பாவிகளுக்காகவும், கல்லுண்டாய் சூழல்மாசடைதல், சுன்னாகம் கழிவு ஒயில் பிரச்சனைகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்காகவும் கட்டணமின்றிக் களமிறங்கியவன்
- முல்லைத்தீவு செம்மலை நீராவியடிப் பிள்ளையார் கோயிலில் பௌத்த பிக்குவின் உடலை எரிக்க முற்பட்டபோது சட்டப் போராட்டத்தைக் கையில் எடுத்தவன்.
- ஈழத் தமிழருக்கு நீதிகேட்டு ஐக்கிய நாடுகள் சபையில் தொடர்ச்சியாகக் குரல் கொடுப்பவன்
- காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், அரசியல் கைதிகளின் விடுதலை, இராணுவத்தின் வசமுள்ள பொது மக்களின் காணிகளை விடுவித்தல் போன்றவற்றிற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலும் ஜனநாயகப் போராட்டக் களங்களிலும் முன்னின்று செயற்படுபவன்.
- சன நெருக்கடி மிகுந்த பிரதேசங்களான கோப்பாய், மாதகல், வட்டுக்கோட்டை போன்ற பகுதிகளில் கொரோனாத் தடுப்பு மையங்களை உருவாக்கி இராணுவத்தை தனிமைப்படுத்த முற்பட்டபோது அவற்றைத் தடுத்து நிறுத்தியவன்.
- சுழிபுரத்தில் மீனவர்களின் வாடி அமைந்துள்ள கரையோரக் காணிகளை கடற்படையினர் ஆக்கிரமிக்க முற்பட்டபோது தடுத்து நிறுத்தியவன்.

தமிழ் மக்களின் ஜனநாயகப் போராட்டக் களங்களில்



தமிழரின் உரிமைக்காக ஐக்கிய நாடுகள் சபையில்







(C-242)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி / அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்


# பௌத்த மத பீடங்கள் நல்ல போதனைகளை மக்களுக்கு வழங்காமல் இனவாதத்தினை வெளிப்படுத்துகின்றது

(கொழும்பு)

மத பீடங்கள் நல்ல போதனையை மக்களுக்கு வழங்கவேண்டும். ஆனால் இந்த நாட்டில் இருக்கின்ற சில பௌத்த பீடங்கள் இனவாதத்தினையே வெளிப்படுத்துகின்றது என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளருமான சீ.யோகேஸ்வரன் குற்றஞ் சாட்டினார்.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை, மகிழடித்தீவில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "மிகவும் இனவாதம்கொண்ட ஜனாதிபதி தமிழ் மக்களின் எதிர்ப்புக்கும் மத்தியிலும் உருவாக்கப்பட்டுள்ளார். தமிழர்களுக்கு எதிரான பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

2015ஆம் ஆண்டுக்கு பின்னர் அரசாங்கத்திற்கு சில ஆதரவுகளை வழங்கியதன் காரணமாக முன்னெடுக்கப்பட்டு வந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு செயற்பாடு புதிய ஜனாதிபதியின் வரவின் பின்னர் தடைசெய்யப்பட்டுள்ளது.

தேசிய கீதமும் தமிழில் பாடும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு தனிச்சிங்களத்தில் பாடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுள்ளன. மத பீடங்கள் நல்ல போதனை மக்களுக்கு வழங்க வேண்டும். ஆனால் இந்த நாட்டில் இருக்கின்ற சில பௌத்த பீடங்கள் இனவாதத்தினையே வெளிப்படுத்துகின்றது.

இவ்வாறானவர்கள் புதிய ஜனாதிபதிக்கு ஆலோசனைகளை வழங்கிக் கொண்டு தமிழ் மக்களுக்கான எந்த உரிமையினையும் வழங்காத வகையில் இந்த பீடங்கள் செயற்படுகின்றன என அவர் சுட்டிக்காட்டினார். (ஜ-4)



# கொரோனா வைரஸ் பரவல் அபாயம் பி.சி.ஆர்.பரிசோதனைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

கொரோனா தொற்றாளர்களை கண்டறிவதற்கான பி.சி.ஆர்.சோதனைகளை நேற்று முதல் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை கொரோனா வைரஸ் தொற்று பரவல் அபாய நிலை தொடர்ந்தும் நீடிப்பதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.



சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இதேவேளை பொலநறுவை லங்காபுர பகுதியில் 300 பேர் உள்ளடங்கலாக ஹிங்குராகொட பகுதியிலுள்ள 58 பேர் பி.சி.ஆர் சோதனைகளுக்குட்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதுவரை காலப் பகுதியில் நாட்டில் ஒரு லட்சத்து 60 ஆயிரம் பி.சி.ஆர்.சோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ஜ-4)

# வாக்குக்காக 2 கோடி ரூபாயை விநியோகித்துள்ள வேட்பாளர்

(கொழும்பு)

பொதுத்தேர்தலில் பதுளை மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் வாக்குகளை சேகரிப்பதற்காக 5 ஆயிரம் ரூபாய் தாள்களை வாக்காளர்களுக்கு விநியோகித்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவர் இதுவரை வாக்காளர்களுக்கு 2 கோடி ரூபாயை வழங்கியிருப்பதாக தேர்தல் வன்முறைகள் தொடர்பான கண்காணிப்பு மையமான சீ.எம்.ஈ.வி தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தநிலையில் தேர்தலுக்கு முன்னர் தேர்தல் களத்தில் இவ்வாறான சீரற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சீ.எம்.ஈ.வியின் தேசிய இணைப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்துரைத்துள்ள தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் மகிந்த தேசப்பிரிய, இவ்வாறான நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் முகமாக நாடாளுமன்றத்தில் யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ள போதிலும் இன்றும் அது அங்கீகரிக்கப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

**நாம் பல தேர்தல்களைக் கடந்து வந்திருக்கின்றோம் முன்னெப்போதும் இல்லாதவாறு இம்முறை தேர்தலில் வேட்பாளர்கள் அபிவிருத்தி மற்றும் பொருளாதாரத்தை முன்நிறுத்தியே பிரச்சாரங்களை மேற்கொள்ளுகின்றனர். அதற்கான காரணம் என்ன?**

கால காலமாகவே எம் மக்களுக்கு அபிவிருத்தியின் தேவைப்பாடு இருந்தது. ஆனால் எங்கள் அரசியல்வாதிகளின் பொய்யான வாக்குறுதிகளை நம்பி எம் மக்கள் தம்மை தியாகம் செய்து அவர்களுக்கு வாக்களித்துவிட்டு காத்திருந்து ஏமாந்து போனார்கள். எனவே இம்முறையும் அபிவிருத்தி சார்ந்தது நாம் சித்திக்காவிடின் அடுத்த 5 வருடங்களுக்குள் எம் மக்களின் நிலை எத்தனை பாரதூரமாக சென்றுவிடும் என்பதை இப்போதே நாம் உணரக்கூடியதாக இருக்கிறது. எனவே இம்முறை நாம் அபிவிருத்தியையும் பொருளாதாரத்தையும் பற்றி அதிகம் சிந்திக்க வேண்டிய தேவை உள்ளது.

**இம்முறை அனைத்துக் கட்சிகளும் அபிவிருத்தியை மேற்கொள்ளவோம் என்று சொல்லுகின்றார்கள் அதில் அங்கஜனின் அபிவிருத்தி எவ்வாறு இருக்கப் போகின்றது?**

நான் கடந்த 10 வருடங்களாக எம் மண்ணில் எம் மக்களோடு இருக்கின்றேன்.அவர்களுக்கான சேவைகளைச் செய்திருக்கின்றேன். இவ்வாறு இருக்க என் மக்களுக்கு எவ்வாறான தேவைகள் இருக்கிறது என்பதை நான் நன்கு அறிந்துள்ளேன். மக்களோடு நேரடியாக அவர்களின் குறைகளைக் கேட்டே எனது "என் கனவு யாழ்" செயல்திட்ட வரைபைத் தயாரித்துள்ளேன். அதிலும் நடைமுறைக்குச் சாத்தியமான செயல்திட்டங்களை மாத்திரமே மக்கள் முன் சமர்பித்தும் இருக்கின்றேன்.

**யாழ் மாவட்டத்தில் பல கட்சிகள் தேர்தலில் களமிறங்கியுள்ள நிலையில் அனைவரின் பார்வையும் விமர்சனமும் உங்கள் மேல் உள்ளதை எவ்வாறு பார்க்கின்றீர்கள் ?**

நான் எப்போதுமே ஆரோக்கியமான அரசியலை விரும்புகின்றவன்.ஆனால் இப்பொது இங்கு என் மீது அதிகளவு விமர்சனங்கள் வைக்கப்படுகின்றது. அது மாத்திரமல்லாமல் தேர்தல் வன்முறைகளிலும் நானே அதிகளவு ஈடுபடுவதாக கூட சொல்கின்றார்கள். ஆனால் அண்மையில் வெளியான தேர்தல் வன்முறைகள் தொடர்பான அறிக்கையில் எனது கட்சி இறுதி நிலையில் கூட இடம்பெறவில்லை மக்கள் என் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை" குழப்புவதற்காகவே இவ்வாறான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகிறது ஆனால் எம் மக்கள் தெளிவாக இருக்கின்றார்கள்.

**அபிவிருத்தி ஒரு நாட்டின் அரசு முன்னெடுக்க வேண்டிய கடமை தானே? அதற்கு ஏன் நீங்கள் அரசுடன் இணைய வேண்டும் என்று கூறுகின்றீர்கள் ?**

முழு நாட்டிற்கும் தேவையான செயல்திட்டங்களை அரசு எப்போதுமே முன்னெடுக்கும். ஆனால் எமது பிரதேசத்திற்கு தனியே தேவையான அபிவிருத்திசார் செயற்பாடுகள் அரசுடன் இணைந்திருந்தால் மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியும். கடந்த காலத்தில் நான் ஒரு பிரதி அமைச்சராக இருந்திருக்கின்றேன்.

ஒரு அபிவிருத்தி செயற்றிட்டத்தை ஒரு பிரதேசத்திற்குக் கொண்டு செல்வதற்கு எவ்வகையான பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டும் என்பது தொடர்பில் நான் நன்கு அறிவேன். எனவே அரசுடன் இணைந்திருந்தால் மாத்திரம் தான் அதனை இலகுவாகக் கையாள முடியும்.

> “சிங்கள அரசில் **தமிழரை** பிரதிநிதித்துவப்படுத்துவதே **எனது நோக்கம்**”
>
> -அங்கஜன் இராமநாதன்

**என் கனவு யாழ் செயல்திட்ட வரைபு மற்றைய தேர்தல் விஞ்ஞாபனங்களில் இருந்தது எவ்வாறு மாறுபடுகிறது?**

கேள்வியிலேயே பதில் உள்ளது. என்னுடையது தேர்தல் விஞ்ஞாபனம் இல்லை அது ஒரு செயல்திட்ட வரைபு. இவ்வரைபு என்னால் மாத்திரம் என் சிந்தனையில் மாத்திரம் உருவான ஒன்று இல்லை. என் மக்களின் சமூகம் முதல் தனிநபர் வரை ஆராய்ந்து அவர்களின் தேவைகளை அறிந்து அவர்களுக்கு தேவையாணவற்றை செய்வதற்கே முற்று முழுதாக எம் மக்களுக்காக உருவாக்கப்பட்டது. அதிலும் நடைமுறை சாத்தியமில்லாத எந்த ஒரு விடயத்தையும் என் செயல் திட்ட வரைபில் உள்ளடக்கவில்லை.

## எனது அரசியல் நிலைப்பாடு

தமிழ் மக்கள் இலங்கைத் தீவின் சுதேச குடிமக்கள், அவர்கள் வடக்கு கிழக்கில் தனியான தாயகம், மொழி, பண்பாடு, கலாச்சார வரலாற்றைக் கொண்ட தேசிய இனம் என்பதை ஏற்றுக்கொண்டு சுதந்திரம் பெற்ற நாள் முதல் அடக்குமுறைகளுக்கு எதிராகவும் தமது சுயநிர்ணய உரிமைகளைப் பெறுவதற்காகவும் தமிழ் மக்கள் மேற்கொண்டு வரும் போராட்டம் நியாயமானது என்பதை அங்கீகரித்து ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டு 10 வருடங்கள் கடந்த பின்னரும் தமிழ் மக்களுக்கு எதிராகப் பாகுபாடுகள், அநீதிகள் தொடருகின்றன என்பதையும் அவர்கள் தொடர்ந்தும் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர் என்பதையும் கவனத்தில் கொண்டு இறுதி யுத்தத்தில் நடந்தவை பற்றி பொறுப்புக்கூறல் பொறிமுறை ஒன்றினூடாக நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட்டு நிலையான சமாதானம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற தமிழ் மக்களின் வலியுறுத்தல்களைப் புரிந்துகொண்டு எந்தச் சந்தர்ப்பத்திலும் தமிழ் மக்களின் உரிமைகளுக்கான போராட்டத்துக்கு எதிராகவோ அல்லது அதனை கொச்சைப்படுத்தும் வகையிலோ செயற்படவில்லை என்பதையும் எதிர்காலத்திலும் அவ்வாறு செயற்படமாட்டேன் என்றும் உறுதி கூறிக்கொண்டு உரிமைகளுக்கான போராட்டத்துக்காக தமது வாழ்க்கையை அர்ப்பணித்த அத்தனை உறவுகளையும் மிகுந்த மரியாதையுடனும் பயபக்தியுடனும் நினைவுகூர்ந்து தமிழ் மக்கள் தாம் விரும்பும் அரசியல் தீர்வு ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்கு மேற்கொள்ளும் ஜனநாயக ரீதியான அத்தனை முயற்சிகளுக்கும் பக்கபலமாகவும் அனுசரணையாகவும் செயற்படுவேன் என்று உறுதி கூறி அரசியல் தீர்வுக்கான முயற்சிகள் ஒருபுறம் நடைபெற எமது மக்களை பொருளாதார , சமூக மற்றும் கலாச்சார ரீதியாக வலுவூட்டுவது மிக மிக அவசியம் என்பதையும் இதன்பொருட்டு தமிழ் மக்கள் மிகவும் சாணக்கியமான முறையில் அரசாங்கங்களைப் பயன்படுத்தி செயற்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தி சிறந்த உபாயங்களை வகுத்து துடிப்புடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படுவேன் என்று உறுதியளிக்கின்றேன்.



## அங்கஜனிற்கு ஏன் வாக்களிக்க வேண்டும்?

- அரசியல் தீர்விற்கான ஆணித்தரமான அழுத்தத்தைக் கொடுப்பதற்கு
- மீண்டும் கல்வியில் முதலிடம் பெறுவதற்கு
- துரித பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு
- விவசாயம். கால்நடை. மீன்பிடித் துறைகளில் துரித மீளெழுச்சி அடைவதற்கு
- மொழி. கலை. கலாச்சார. பண்பாட்டு. இலக்கிய புத்தாக்கத்திற்கு
- அனைத்துத் தமிழ் உறவுகளையும் ஒரே புள்ளியில் இணைப்பதற்கு
- உடல். உள நலன்மிக்க ஆரோக்கியமான சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்கு
- தொழில்நுட்பத்தை மையப்படுத்திய சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்கு
- அறிவுபூர்வமான. சக்திமிக்க மகளிர். இளைஞர்களின் எதிர்காலத்தை உருவாக்க
- இயற்கை. பௌதீக. ஆளணி. வளங்களை மேம்படுத்துவதற்கு

செயல்திட்ட வரைவு தொடர்பான மேலதிக தகவல்களுக்கு
www.enkanavuyarl.lk

X 1

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி

அங்கஜன் இராமநாதன்
BSc.(Eng), MBA.

என் கனவு யாழ்

(C-247)

## வெலிக்கடைக் கைதிகள் கொலை வழக்கு

# பிரதிவாதிகளின் சாட்சிகளை பதிவு செய்யத் தீர்மானம்

(கொழும்பு)

2012 ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலைக்குள் கைதிகள் சிலர் கொலை செய்யப்பட்ட வழக்கில் தம் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து சாட்சி கூண்டில் நின்று தமது சமர்ப்பிப்புக்களை முன் வைக்க வேண்டும் என முன்னாள் பொலிஸ் போதைப் பொருள் பணியகத்தின் பொலிஸ் பரிசோதகர் நியோமல் ரங்கஜீவ மற்றும் முன்னாள் சிறைச்சாலைகள் ஆணையாளர் எமில் ரஞ்சன் லமஹேவா ஆகியோர் மூவரடங்கிய கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதிகள் முன் தெரிவித்தனர்.

இந்த வழக்கு கிஹான் குலதுங்க, பிரதீப் ஹெட்டியாராச்சி மற்றும் மஞ்சுல திலகரத்ன ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது மன்றில் ஆஜரான பிரதிவாதிகள் தரப்பு சட்டத்தரணி தமது கட்சிக்காரர்கள் சாட்சி கூண்டில் நின்று தமது சமர்ப்பிப்புக்களை முன் வைக்க எதிர்பார்ப்பதாக கூறினார்.

மேலும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பாக சாட்சிகளை அழைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அதன்படி, எதிர்வரும் 19 ஆம் திகதி இந்த வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள தீர்மானித்த மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் அன்றைய தினம் பிரதிவாதிகளின் சாட்சிகளை பதிவு செய்வதாகவும் அறிவித்தனர். (ஜ-4)

பாராளுமன்றத் தேர்தல்-2020


எமது புனிதர் சாள்ஸ் மகாவித்தியாலயத்தின்
புகழ்பூத்த பழைய மாணவர்களில் ஒருவர்
பாடசாலையின் அபிவிருத்திக்கு கைகொடுப்பவர்
வேதநாயகம் தபேந்திரன்
B.Com, PGD.PDS,M.A
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
இலங்கைத் தமிழரசுக் கட்சி
X 9
(100)
பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற பாடசாலை சமூகம் யாவரும் கைகொடுப்போம்.
பழைய மாணவ நண்பர்கள், யா/புனிதர் சாள்ஸ் மகாவித்தியாலயம்.

## 6 ஆயிரத்தைக் கடந்த தேர்தல் முறைப்பாடுகள்

(கொழும்பு)

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் இதுவரையில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அதன் அடிப்படையில் இதுவரையில் 6 ஆயிரத்து 15 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும் ஒரு வன்முறைசெயல் கூட இதுவரை பதிவாகவில்லை என தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-4)

ஊழலற்ற மக்கள் சேவை எமது குறிக்கோள்
(076)



மாற்றத்திற்கான முயற்சி - மற்றுமொரு புரட்சி
ஐக்கிய மக்கள் சக்தி
யாழ்-கிளிநொச்சி மாவட்டம்
சமூக தொண்டிலிருந்து அரசியலுக்கு
காசியன் ஜெயராஜன்
(சமூக சேவையாளன்)
X 4
சிவன் பவுண்டேசனிலிருந்து உங்கள் சேவையாளன்
வேலாயுதம் கணேஸ்வரன்
(யாழ்-கிளிநொச்சி மாவட்ட முதன்மை வேட்பாளர்)
X 10

# சஜித்தை கைதுசெய்ய அரசாங்கத்துடன் எந்த ஒப்பந்தமும் செய்யப்படவில்லை



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவை கைது செய்ய அரசாங்கத்துக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் எந்த ஒப்பந்தமும் செய்யப்படவில்லை என அக்கட்சியின் பொதுச்செயலாளர் அகிலவிராஜ் காரிய வசம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற செய் தியாளர் சந்திப்பு ஒன்றில் கருத்து தெரி வித்த அவர், அதற்கு பதிலாக அரசாங்கத்திற்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையில்தான் ஒப்பந்தம் எட்டப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் எனக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் "ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கிய வர்கள்தான் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்தவர்கள். பிரேமதாஸ அவரை பிரதமர் வேட்பாளராக ஆக்குவதற்கும், ஒரு கூட்டணியை உருவாக்குவதற்கும், அவரை குழுவின் தலைவராக நியமிப்பதற்கும் முயன்றார்.

எனவேதான் ஐக்கிய மக்கள் சக்தி யின் பொதுச் செயலாளரை ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய பொதுச் செயலாளராக நியமிக்க வழிவிடும் முகமாக அப் பதவி யில் இருந்து விலக நான் முன்வந்தேன். இருப்பினும், பிரேமதாஸ மற்றும் அவரது ஆதரவாளர்கள் தனித்தனியாக போட் டியிட முடிவு செய்தனர்.

இதேவேளை மத்திய கலாசார நிதியத்தில் பணம் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டமை குறித்து பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நியமித்த குழுவால் பிரேமதாஸ மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து எனக்குத் தெரியாது.

மேலும் இந்த நிதியில் உள்ள பணம் நிர்வாக சபையின் ஒப்புதலுடன் மட்டுமே பயன்படுத்தப்பட்டது" என அவர் தெரிவித்தார். (ஜ-4)

மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி

இடம்: வட்டுக்கோட்டை
காலம்: 02.08.2020 (1.30 pm)
அனைத்து காளைச் சொந்தக்காரர்களையும் சவாரிப் பிரியர்களையும் அன்போடு வரவேற்பதுடன் தமிழர் தம் பண்பாட்டு நிகழ்வுகளில் ஒன்றாகிய மாட்டு வண்டிச் சவாரியை தமிழர் பாரம்பரிய கலை, பண்பாட்டு விளையாட்டாகப் பதிவு செய்வதற்கு உறுதுணையாகவிருந்த முன்னாள் விவசாயப் பிரதியமைச்சர்
கௌரவ அங்கஜன் இராமநாதன்
அவர்கள் வருகின்ற பாராளுமன்றத் தேர்தல் - 2020 இல் அமோக வெற்றி பெற மாட்டுவண்டிச் சவாரிச் சங்க உறுப்பினர்கள், காளைச் சொந்தக்காரர்கள், சவாரிப்பிரியர்கள் சார்பாகப் பூரண ஆதரவையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.
நன்றி
(104)
யாழ்.மாவட்ட மாட்டு வண்டிச் சவாரிச் சங்கத்தினர்.

# பாராளுமன்றத் தேர்தல் - 2020

## யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

## தேசியம்... சூழலியம்... சுயநிர்ணயம்




1

முதன்மை வேட்பாளர்

**பொ. ஐங்கரநேசன்**

சூழலியலாளர்

முன்னாள் விவசாய அமைச்சர் - வடமாகாணம்



க. கேதீஸ்வரநாதன்

கௌரவ உறுப்பினர்

நெடுந்தீவு பிரதேச சபை



ஜீ. ஜெயதீஸ்

மரபியலாளர்



தே. மிதுசன்

மாணவன்

யாழ். பல்கலைக்கழகம்.



நா. பார்த்தீபன்

பொது முகாமையாளர் - பனை. தென்னை வள

அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் - கரவெட்டி.



நிமலினி வோல்டன்

சமூக சேவகி



பா. காசிநாதன்

ஓய்வுநிலை ஆசிரியர்


யாழ். பரியோவான் கல்லூரி



மலர் சின்னையா


ஓய்வுநிலை அதிபர்

ஆசிரியர் கலாசாலை. கோப்பாய்.



சண் தயாளன்

ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்



கா.சோ. சிவநேசன்

சூழலியல் நிபுணர்

அரசியலில்
தமிழ்த் தேசியச் செழுமை
அபிவிருத்தியில்
நிலைபேறான முழுமை
சுற்றுச்சூழலில்
காணுமிடமெல்லாம் பசுமை

## மாங்கனி வெற்றிக்கனி

சுயேச்சைக் குழு - 8 | X

# தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

(C-220)

# பாராளுமன்றத் தேர்தல் - 2020


தமிழ் மக்கள் தேசிய கூட்டணி

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்

## மதத்தலைவர்களின் ஆசியோடு தமிழ் இனத்துக்கான நேர்மைமிகு அரசியல் தலைமை வெற்றிவாகை சூடட்டும் - தமிழ் இனம் தழைக்கட்டும்.










அன்புக்குரிய தமிழ் உறவுகளே! நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தலைமையில் தமிழ் இனத்துக்கான அரசியல் தலைமையை உருவாக்குங்கள். உங்கள் வாக்குகள் எம் எதிர்கால இளம் சமூகத்திற்கும் சந்தர்ப்பம் வழங்க ஆளுமைமிக்கவர்களை ஆதரியுங்கள்.




- புலம்பெயர் தமிழ் உறவுகள்



ஏற்றமிகு எதிர்கால சந்ததியின் ஆற்றல்மிகு ஆளுமையை ஆதரிக்க...

**உங்கள் வாக்குகளை மீன் சின்னத்துக்கு வழங்குங்கள்**



6 10

நீதியரசர்
சி.வி.விக்னேஸ்வரன்

1 2 3 4 5 6 7 8 9 10

தவச்செல்வம் சிற்பரன்
யாழ். இந்துவின் மைந்தன்
(Architect மொறட்டுவ பல்கலைக்கழகம்)

(C-225)

நாங்கள் தோற்றுப்போனவர்கள்
என்று கருதுவது கூட
ஒரு வகை அடிமைத்தனம்தான்!
-நல்லூர்

மரபு வழி தாயகத்தில் உயர்ந்தபட்ச
அதிகாரபகிர்வை ஏற்படுத்துவதுதான்
எமது இலக்கு! - நெல்லியடி

உங்கள் உயர்வான,வளமான
வாழ்க்கைக்காக இறுதி மூச்சு
வரை பயணிப்பேன்!
-சாவகச்சேரி

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட
மக்களின் வாழ்க்கையை
செப்பனிட்டு மகிழ்வான
வாழ்வை கொடுக்கவேண்டிய
தேவையும் உள்ளது!
-கிளிநொச்சி

அதேவேளை நமது எதிர்கால
சந்ததி கருதி எமது இருப்பை
பேணவேண்டிய தேவையும்
இருக்கிறது!

**அனுபவம்
நிறைந்த
நேர்மையான
கல்வியியலாளன்**
-ஆசிரிய நண்பர்கள்


**சிறந்த தலைமைப்
பண்புள்ள
அதிபர்**
-அதிபருடன் பணியாற்றிய
ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள்

**கடுமையான
சூழ்நிலைகளில் கூட
தமிழ்த்
தேசியத்துக்காய்
உழைத்தவன்**
-நண்பர்கள்(மக்கள்)

ஒற்றுமை என்பது மக்கள்
நலன் சார்ந்ததாக இருக்க
வேண்டுமே தவிர சரணாகதி
அரசியலுக்கானதாக
இருக்கக்கூடாது!

நீங்கள் அளிக்க இருக்கும்
ஒவ்வொரு வாக்கும்
எங்கள் இனத்தின்
உயர்வுக்கான வாக்கு
என்பதை
மறந்து விடாதீர்கள்!

உரிமைக்காகவும்,
வளமான வாழ்வுக்காகவும்
உறுதியாக நின்று
உழைக்கக்கூடியவர்களை
தேர்வு செய்யும் அரிய
வாய்ப்பை சரியாக
பயன்படுத்துங்கள்!



2



# க.அருந்தவபாலன்

B.A(Hons)(Econ), M.Ed, PGDE, PGDEM
ஓய்வுநிலை அதிபர்

## தமிழ் மக்கள் தேசிய கூட்டணி

(C-231)

உங்களோடுதான் இருப்பேன்
உங்கள் குரலாய் ஒலிப்பேன்

SCAN ME

நாடாளுமன்ற
தேர்தல்
2020

# ஏழுபேர் கைது

(கொழும்பு)

தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறியமை தொடர்பில் இதுவரை வேட்பாளர்கள் ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம், வவுனியா, புத்தளம், குருநாகல் ஆகிய மாவட்டங்களில் போட்டியிடும் வேட்பாளர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த விஜய சூரிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை தேர்தல் சட்டவிதிமுறைகளை மீறி செயற்பட்டமை தொடர்பில் இதுவரை பொலிஸ் பணியாளர்கள் 10 பேருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)





















# இலங்கை வரலாற்றில் பதிவாகவுள்ள எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல்

(கொழும்பு)

எதிர்வரும் ஒகஸ்ட் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தல், இலங்கை வரலாற்றில் மிக அதிக செலவை கொண்டு நடத்தப்படும் தேர்தலாக அமையவுள்ளது.

இந்நிலையில் 2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கான செலவை 10 பில்லியனுக்குள் மட்டுப்படுத்த தேர்தல்கள் ஆணைக்குழு போராடி வருவதாகவும் ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொரோனா தொற்று காரணமாக எதிர்கொள்ள வேண்டிய பல சுகாதார நடவடிக்கைகள் மற்றும் மேலதிக ஊழியர்களை நியமித்தல் ஆகியவற்றின் காரணமாக செலவுகள் 10 பில்லியனை தாண்டாமல் இருப்பதை உறுதி செய்ய முயற்சியை மேற்கொண்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை கொரோனா தொற்று காரணமாக தங்கள் வீடுகளில் சுய தனிமைப்படுத்தலில் உள்ளவர்கள் சுகாதார அமைச்சின் அனுமதியைத் தொடர்ந்து வாக்களிக்க முடியும் என்றும், அவர்களுக்கு ஒரு தனி நேரத்தை ஒதுக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் மகிந்த தேசப்பிரிய குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு வாக்களிப்பிற்கான நேரம் மேலும் ஒரு மணி நேரம் ஏற்கனவே நீடிக்கப்பட்டுள்ளது என்றும் அந்தவகையில் காலை 7 மணி முதல் மாலை 5 மணிவரை வாக்களிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (ஜ-4)

# போதைப்பொருள் கடத்தல்காரர் கைது

(கொழும்பு)

தெமட்டகொடை பிரதேசத்தில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பொன்றில் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய சந்தேக நபரொருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட நபரின் வீட்டிலிருந்து ஒரு இலட்சத்து 40 ஆயிரம் அமெரிக்க டொலரும் மற்றும் 5 கோடியே 80 இலட்சம் ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஜ-4)

# கைக்குண்டு மீட்பு

(கொழும்பு)

திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயம் அமைந்துள்ள பகுதிக்கு அருகாமையில் கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை அரச புலனாய்வு பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது நேற்றுக் காலை குறித்த கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். செயலிழக்கப்பட்ட நிலையில் குறித்த கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ஜ-4)


பாராளுமன்றத் தேர்தல் - 2020



யாழ்.கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

X 1

அங்கஜன் இராமநாதன்

கீழ்க்காணும் விடயங்களை நடைமுறைப்படுத்தி எமது விவசாயிகளின் பொருளாதாரம் மற்றும் விவசாயத்தை நம்பி வாழும் மக்களைக் காப்பாற்றுவதற்கு எமது விவசாயிகளின் வேட்பாளர் க.தியாகலிங்கம் அவர்களை ஆதரிப்போம்

01. உள்ளூர் உற்பத்தி பொருட்கள் கணிசமான அளவு அறுவடை செய்யப்படும் சந்தர்ப்பங்களில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மரக்கறிகளுக்கு இறக்குமதி வரியை அதிகரித்தல். இதன்மூலம் உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கு சந்தைகளில் நியாயமான விலைகள் கிடைக்கப்படும்.

02. உள்ளூர் சந்தைகளில் மரக்கறி விற்பனையின் போது காணப்படும் கழிவு நடைமுறையை நீக்கி மாற்று வழிமுறைகள் மூலம் வியாபாரிகளும் விவசாயிகளும் பாதிப்படையாத வகையில் தீர்வு ஒன்றைப் பெற்றுக்கொடுத்தல்.


03.உள்ளூர் சந்தைகளில் தற்போது காணப்படும் பிரதேச சபையினரால் விதிக்கப்படும் 4% வரியை 2% ஆக குறைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

04.பழவகை,உணவுப் பொருட்களை அறுவடை செய்யும் காலத்தில் சந்தைப்படுத்த முடியாத சந்தர்ப்பங்களில் விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு பழச்சர உற்பத்தி தொழிற்சாலைகளை நிறுவுதல். இதன்மூலம் இலகுவாக விவசாயிகள் நட்டம் ஏற்படாத வகையில் தமது உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்த முடியும்.

05.யாழ்ப்பாண விவசாயிகளினால் சிறப்பாக உற்பத்தி செய்யப்படும் உருளைக்கிழங்குப் பயிர்ச் செய்கையை எமது விவசாயிகள் தொடர்ந்தும் வருடம் வருடம் உற்பத்தி செய்வதற்கு விதை உருளைக்கிழங்கு மானிய அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

06.இயற்கை அழிவுகளின் போது விவசாயிகள் அடுத்தகட்ட போக விவசாய நடவடிக்கை மேற்கொள்வதற்கு மானிய அடிப்படையில் பயிர் விதைகள் மற்றும் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும்.

07.விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் காப்புறுதித்திட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும். இதன் மூலம் விவசாய நடவடிக்கையின் போது ஏற்படுகின்ற அனர்த்தங்களின் போதும் இந்த காப்புறுதித்த திட்டங்கள் உதவிகரமாக அமையும்.



கந்தையா தியாகலிங்கம் (சின்னக்கிளி)

யாழ்.மாவட்ட கமக்கார அமைப்புக்களின் அதிகார சபை தலைவர்

3

யாழ்.மாவட்ட விவசாயிகள்


# கட்டுநாயக்கவில் பிரமாண்ட திட்டம்



(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தின் புதிய முனையத்தின் கட்டுமானப் பணிகள் 2020 செப்டெம்பரில் ஆரம்பிக்கப்பட்டு மூன்று ஆண்டுகளுக்குள் நிறைவடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், புதிய முனையத்தின் கட்டுமானப்பணிகள் முடிவடைந்ததும், ஆண்டுக்கு மேலும் 9 மில்லியன் பயணிகளைக் கையாள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஆண்டுக்கு 15 மில்லியன் பயணிகளைக் கையாளுவதற்கு இந்த புதிய முனையம் உதவியாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# வெள்ளைவான் கடத்தல் விவகாரம் குற்றப்பத்திரிகைகள் தாக்கல்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ன மற்றும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபன முன்னாள் தலைவர் மொஹமட் ரூமி ஆகியோருக்கு எதிராக நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் வெள்ளை வான் கடத்தல் தொடர்பில் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்த குற்றச்சாட்டு தொடர்பிலேயே இந்த குற்றப்பத்திரிகைகள் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்தநிலையில் குறித்த செய்தியாளர் சந்திப்பின்போது சாட்சியங்களாக கொண்டுவரப்பட்ட இருவரையும் விடுவிக்கும் கோரிக்கையும் சட்டமா அதிபரால் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)


பாராளுமன்றத் தேர்தல் - 2020



9

யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை பட்டதாரியும் மிகச் சிறந்த சமூக சிந்தனையாளரும் சமகால தேவைகளை வெளிக்கொணரும் சிறந்த எழுத்தாளர் பேச்சாளர் முற்போக்குவாதி ஆகிய எம்து நண்பர்

வேதநாயகம் தபேந்திரன்

(B.COM,PGD,PDS,MA)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

அவர்கள் பாராளுமன்றத் தேர்தலில் யாழ்,கிளிநொச்சி மாவட்டங்களில் வேட்பாளராக போட்டியிடுகின்றார். எமது நண்பர் வெற்றி பெற்று நம் மக்களுக்கு சிறந்த சேவையாற்ற வேண்டுமென வாழ்த்தி மகிழ்கிறோம்.

இளம் தலைமுறையினரின் புதிய வருகை

சீரிய நேரிய பாதைக்கான மாற்றம் உங்கள் கைகளில்

X 9

யாழ்.பல்கலைக்கழக நண்பர்கள்

# நல்லவர்க்கெல்லாம் சாட்சிகள் உண்டு




**நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் அனைத்துச் சமயங்களையும் மதிக்கின்ற பண்பாளர். ஆன்மபலமும் தெய்வ நம்பிக்கையும் கொண்டவர். எங்கள் அரசியல் உரிமையை வென்றெடுப்பதற்கு ஆன்ம பலம் அவசியம் என்பது உணரப்படுகிறது.**

தன் மக்களுக்கு எப்போதும் நன்மை செய்த ஜூலியஸ் சீஸரை ஒரு தீயவனாகச் சில ஈனப்பிறவிகள் காட்டி நிற்கின்றனர்.

ஈனர்கள் எப்போதும் உரத்துக் குரல் கொடுப்பர். எனினும் சீஸரின் நற்குணத்தை, அவர் மக்களுக்குச் செய்த நன்மையை எடுத்துக்கூறுவது தன் தர்மம் என்றுணர்ந்த மார்க் அன்ரனி; சீஸர் பற்றி மிக நுட்பமாக எடுத்துச் சொல்கிறார். அப்போதுதான் மக்கள் சீஸரைப் பற்றி அறிந்து கொள்கின்றனர். சீஸர் மிக் உன்னத மானவர் என்பதைப் புரிந்து கொள்கின்றனர்.

இதுபோலத்தான் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களின் நேர்மைக்குக் களங்கம் கற்பிக்க ஈனர்கள் சிலர் கடும் பிரயத்தனம் செய்கின்றனர்.

மனிதப் பண்பின் அடிப்படைகளை மீறி எப்படியும் அவரைத் தூற்ற முடியும் என்ற அநாகரிகச் செயலில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ் மக்களுக்குக் கிடைத்த ஒரு நல்ல தலைவனை வலிந்து வெளியேற்றிவிட்டால், பின்னர் தாங்கள் இட்டதே சட்டம் என்றாகி விடுமல்லவா. அதற்காகவே இத்துணை அநியாயங்கள்.

இதில் வேடிக்கை என்னவென்றால், தகுதி; தராதரம் ஏதுமின்றி சில அரசியல்வாதிகள் நீதியரசர் விக்னேஸ்வரனை விமர்சிக்கத் தலைப்பட்டனர் எனும்போதுதான் பித்தம் சிரசுக்கேறுகிறது.

இப்படியெல்லாம் அநீதிகளும் அக்கிரமங்களும் தலைவிரித்தாடும் என்பதாலேயே தந்தை செல்வநாயகம் தமிழ் மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் எனக் கூறினார் போலும்.

நாம் ஏற்கனவே கூறியது போல, தமிழ்மக்களுக்கு நல்லதொரு தலைவன் தேவை. அந்தத் தலைவன் யார்? என்பதைத் தமிழ்மக்கள் தாங்கள் இடும் புள்ளடி மூலம் சுட்டிக் காட்ட வேண்டும்.

ஒட்டுமொத்தத் தமிழ்மக்களும் தங்கள் தலைவன் யார்? என்பதை தமது வாக்குகளால் சுட்டிக்காட்டும் போது, தீயவர்கள் திருந்துவர். அல்லது நம்மை விட்டு வெளியேறுவர்.

ஆகையால், அன்புக்குரிய தமிழ்மக்களே! இன்றைய எங்கள் அரசியல் மிகக் கேவலமாகிவிட்டது. இத்தகையதொரு அரசியல் அநாகரிகம் நீண்டுசென்றால், எங்கள் இளம் சமூகத்திற்கு நாம் காட்டுகின்ற அரசியல் பாதை என்பது பொய்யும் புரட்டும் ஊழலும் ஏமாற்று நாடகமுமாக முடிந்து விடும்.

ஆகவே, எங்கள் தமிழினத்திற்கு தர்மமான அரசியலைத் தாருங்கள். ஆன்மபலம் மிக்கவர்களை முன்னிறுத்துங்கள்.

அண்மையில் அருட்தந்தை ஒருவருடன் கலந்துரையாடுகின்ற சந்தர்ப்பம் கிடைத்தது. அப்போது அவர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் ஐயா மீது மிக உயர்ந்த மதிப்பு வைத்திருப்பதை என்னால் உணரமுடிந்தது.

எமக்கு அருகில் இருந்த ஒருவர்; நீதியரசரிடம் சைவச்சாயல் உள்ளது என்றார். அதற்கு அருட்தந்தை கூறினார்; நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனின் வெளித்தோற்றத்தில் சைவ அடையாளம் இருப்பது உண்மைதான்.

ஆனால், அவரிடம் எல்லாச் சமயங்களையும் மதிக்கின்ற உயர் பண்பு உள்ளது. எனக்கு நன்கு தெரியும் நீதியரசர் மடுமாதா மீது மிகுந்த பக்தி கொண்டவர். மடுமாதாவைத் தன் தாய்த்தெய்வமாகப் போற்றுபவர். அவரிடம் சமயபேதம் இல்லை. அவரிடம் ஆன்மீகமும் தெய்வீகமும் இருக்கிறது என்று கூறியதோடு மட்டும் அருட்தந்தை தன் கருத்தை நிறுத்தவில்லை.

ஆன்மபலம் எங்கள் உரிமையை வென்றெடுக்கத் தேவை என்பதை நான் உணர்கிறேன். அதனால் தானோ என்னவோ எல்லோரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய மீன் சின்னம் நீதியரசருக்குக் கிடைத்துள்ளது என்றார்.

அப்போதுதான் நினைத்தேன், நீதியரசரின் பெருந்தன்மையை மழுங்கடிக்க ஈனர்கள் முற்பட்டாலும் மார்க் அன்ரனி போன்ற தூய உள்ளத்தினர் உண்மையை, நேர்மையைக் காப்பாற்ற முன்னெழுவர் என்று.

அன்புக்குரிய தமிழ் உறவுகளே! உங்கள் தீர்ப்பை நீதியரசர் எதிர்பார்த்து நிற்கிறார். இறைவன் எம் இனத்தைக் காக்கட்டும். தமிழ்மக்கள் வழங்குகின்ற தீர்ப்பு இறை தீர்ப்பாக அமையட்டும்.

(முற்றும்)

புருசோத்தமன்

# இதுவரை அளித்த வாக்குகள் அரசியல்வாதிகளை வாழவைத்தது இம்முறை அளிக்கும் வாக்குகள் மக்களை வாழ வைக்கும்

## அங்கஜன் இராமநாதன் நம்பிக்கை

(யாழ்ப்பாணம்)

பத்திரிகைகளில் எம்மைப்பற்றி மிகப்பெரிய பொய்களைக் கூறி மக்களை ஏமாற்றப் பார்ப்பார்கள். மக்கள் அவதானமாக இருக்கவேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.- கிளிநொச்சி மாவட்ட வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பல கிராமங்களில் மக்கள் அன்றாடத் தேவைகளைப் பெற்றுக் கொள்வதில் பல பிரச்சினைகள் உள்ளன.

கடந்த காலங்களில் மக்கள் பல தியாகங்களைச் செய்து கூட்டமைப்புக்குத் தான் வாக்களித்து வந்துள்ளனர்.

விடுதலைக்காக போராடியவர்களின் நேர்மை இவர்களுக்கும் இருக்கும் எனும் நம்பிக்கையிலேயே வாக்களித்தார்கள்.

ஆனால், இம்முறை மக்கள் தெளிவாகவே இருக்கிறார்கள். இதுவரைக்கும் தாம் அளித்த வாக்குகள் அரசியல் வாதிகளை மட்டுமே வாழவைத்தது. இம்முறை அளிக்கும் வாக்குகள் மக்களை வாழ வைக்க வேண்டும்.

அவ்வாறெனில் மக்கள் சுதந்திரக்கட்சிக்கு வாக்களித்தல் வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (2-8)




AIA இன்ஷுவரன்ஸ்
நிதியியல் ஸ்திரத்தன்மை - நிலையான சேவை.




எங்கள் மீது நம்பிக்கை வைத்த அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். AIA குழுமத்தில் அங்கம்வகிப்பதுடன், **100 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தினைக் கொண்ட, உலகின் பாரிய ஆயுள்காப்புறுதி நிறுவனமாக** தேகாரோக்கியமான, நீண்ட, சிறப்பான வாழ்க்கையை உங்களுக்கு தொடர்ந்தும் வழங்க அர்ப்பணிப்புடன் பணியாற்றுவோம். உங்கள் அன்புக்குரியவர்களின் நிதியியல் பாதுகாப்பினை உத்தரவாதப்படுத்தவே, நீங்கள் காப்புறுதியினை கொள்வனவு செய்கின்றீர்கள் என்பதனை நாம் நன்கு புரிந்துகொள்கின்றோம். AIA இன் பலம் மற்றும் ஸ்திரத்தன்மை மூலமாக, AIA உங்கள் வாழ்க்கைக்கு சிறந்ததை வழங்கும் என நாம் உறுதியளிக்கின்றோம்.

- இலங்கையின் காப்புறுதித் துறையில் பாரிய மூலதன விகிதத்தினைக் கொண்டிருத்தல்.
- 30 வருடங்கள் தொடர்ச்சியாக இலாபப்பங்கினைப் பகிர்ந்ததில் சாதனை (2019 ஆம் ஆண்டு 9.99% ஐ பகிர்ந்துள்ளது).
- உயர் தரத்திலான முதலீடுகளை மேற்கொண்டிருத்தல்.
- ஓய்வூதியம் மற்றும் தேகாரோக்கியம் போன்ற ஆயுள் காப்பீட்டுத் திட்டங்களின் முன்னோடி.

*12 மார்ச் 2019 ஆண்டின் சந்தை மூலதன மதிப்பின் அடிப்படையில் உலகின் பாரிய ஆயுள்காப்புறுதி நிறுவனம்

ஓய்வூதியம், தேகாரோக்கியம் மற்றும் ஆயுள் காப்புறுதி

AIA இன்ஷுவரன்ஸ்

HEALTHIER, LONGER, BETTER LIVES

## தமிழ் மக்களுக்கு...

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தன்னை அரசியலுக்குள் கொண்டுவந்த நன்றியை மறந்து விக்னேஸ்வரன் அவரை விமர்சிப்பதாகவும் எதிராக செயற்படுவதாகவும் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் கடந்த சில நாட்களாக விக்னேஸ்வரனுக்கு எதிராக செய்துவரும் விமர்சனங்களுக்கு அவர் இவ்வாறு பதிலடி கொடுத்துள்ளார்.

தேர்தல் பிரசாரங்கள் இன்று ஞாயிற்றுக் கிழமையுடன் முடிவடையும் நிலையில் தமிழ் மக்கள் தேசிய கூட்டமைப்புக்கு வாக்களிக்குமாறு பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்து வெளியிட்டுள்ள விசேட அறிக்கை ஒன்றிலேயே இதனை தெரிவித்துள்ள விக்னேஸ்வரன், "நான் எவ்வளவு காலம் இருப்பேன் என்பது தெரியாது. ஆனால், எனக்குப் பின்னர் முகவர்கள் நுழைந்து தமிழ் தேசியத்தின் பாதை தடம்புரளாமல் இருக்கவேண்டுமானால் வலுவான நிறுவனமயப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் அவசியம். ஆகவே, புத்திஜீவிகளே, செயற்பாட்டாளர்களே! எம்முடன் ஒன்றிணையுங்கள் என்று இந்த சந்தர்ப்பத்தில் வேண்டிக் கொள்கின்றேன்." என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

விக்னேஸ்வரன் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எனது அன்புக்குரிய தமிழ் மக்களே,

வாக்களிப்பு தினத்துக்கு இன்னமும் சில நாட்களே இருக்கின்றன. கட்சிகளின் தேர்தல் பிரசாரங்கள் மற்றும் விஞ்ஞாபனங்களின் அடிப்படையில் எந்த கட்சிக்கு வாக்களிப்பது என்பது தொடர்பில் ஒரு தெளிவான முடிவுக்கு நீங்கள் தற்போது வந்திருப்பீர்கள். தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் கொள்கைகள், நோக்கங்கள் மற்றும் அந்த நோக்கங்களை அடைவதற்கான எமது அணுகுமுறைகள் மற்றும் உபாயங்கள் தொடர்பில் தெளிவான ஒரு தேர்தல் விஞ்ஞாபனத்தை நாம் உங்கள் முன்வைத்திருக்கிறோம். இதுவரை அதனை நீங்கள் படித்து பார்க்கவில்லையானால் தயவுசெய்து வாக்களிக்க செல்வதற்கு முன்னர் அதனைப் படித்துப்பாருங்கள்.

எமது பூர்வீகப் பகுதிகளான இணைந்த வடக்கு-கிழக்கில் சுயநிர்ணய அடிப்படையில் - சமஷ்டி அடிப்படையிலான தீர்வு ஒன்றைப் பெறுவதே எமது நோக்கம். ஆனால், வரலாற்று படிப்பினைகளின் அடிப்படையிலும் சமகால உலக நடைமுறைகள், முரண்பாடுகளுக்கான தீர்வு கோட்பாடுகள், பூகோள அரசியல், சர்வதேச உறவு கோட்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் இறுதித் தீர்வு தொடர்பில் சர்வதேச ரீதியான ஒரு சர்வஜன வாக்கெடுப்பை நாம் கோருகின்றோம். அத்தகைய ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடைபெறும்வரை இடைக்கால தீர்வு ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும் என்பது எமது கோரிக்கை ஆகும்.

கடந்த 10 வருடங்களாக தமிழ் தேசிய கூட்டமைப்பு சரியாக இனங்கண்டு பயன்படுத்தத் தவறியதுடன் ஒரு சிலரின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்ப செயற்பட்டமையே எமது எல்லா பின்னடைவுகளுக்கும் கார ணம் ஆகும். இந்த அறிவை நாம் எமது நிறுவனமயப்படுத்தப்பட்ட செயற்பாடுகளில் சரியாகப் பயன்படுத்துவோமானால் வெற்றிகள் எம்மை நிச்சயம் தேடி வரும். இதற்கு தமிழ் அரசியல் கட்சிகளிடையே மட்டுமன்றி புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மத்தியிலும் ஒருங்கிணைந்த செயற்பாடு அவசியமாகும். நான் எவ்வளவு காலம் இருப்பேன் என்பது தெரியாது. ஆனால், எனக்குப் பின்னர் முகவர்கள் நுழைந்து தமிழ் தேசியத்தின் பாதை தடம்புரளாமல் இருக்க வேண்டுமானால் வலுவான நிறுவனமயப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் அவசியம். ஆகவே, புத்திஜீவிகளே, செயற்பாட்டாளர்களே! எம்முடன் ஒன்றிணையுங்கள் என்று இந்த சந்தர்ப்பத்தில் வேண்டிக்கொள்கின்றேன்.

இம்முறை தேர்தலில் பெரும் போட்டிகளும் பிளவுகளும் தமிழ் தேசிய கட்சிகளுக்கு இடையே இருந்தாலும், தமிழர் அரசியலை செப்பனிடுவதற்கும் கொள்கைகள் அணுகுமுறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் எமது மக்களுக்கு பொறுப்பு கூறும் வகையிலுமான ஒன்றுபட்ட ஒருங்கிணைந்த அரசியல் பரிமாணம் ஒன்றுக்கு இம்முறை தேர்தல் முடிவுகள் வழிவகுக்கும் என்பது எனது ஆழமான நம்பிக்கை.

தேர்தலுக்கு முன்னர் ஒத்த கொள்கை உடைய எல்லோரையும் ஒன்றிணைக்க எல்லா முயற்சிகளையும் எடுத்தேன். ஆனால் சிலர் இணைந்து செயற்பட முன்வரவில்லை. அவர்களுக்கு தமிழ் மக்களின் பிரச்சனைகளைவிட கட்சி நலன் முதன்மையாக இருந்தது போல் தெரிந்தது. நான் இன்றும் சொல்கிறேன் இத்தேர்தலின் பின் கூட பலரை இந்தக் கூட்டணியுடன் இணைத்து முன்னோக்கிச் செல்லவே விரும்புகின்றேன். அதனால் தான் ஒத்த கொள்கை உடையவர்களை பலமாகத் தாக்கி எமக்குள்ளே பிளவுகளை ஆழமாக்காமல் பிரசாரம் செய்வதை தவிர்த்து வருகின்றேன். ஆனால், பரந்த ஒரு கூட்டணி அமைப்பது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தொடர்பில் பொதுமக்களுக்கு தவறான கருத்துக்கள் கூறப்பட்டு வருவதை நான் அறிவேன்.

இதேவேளை, தேர்தல் பிரசாரங்கள் அனைத்தும் ஞாயிற்றுக்கிழமையுடன் (இன்றுடன்) நிறைவடையும் நிலையில் எனக்கு எதிராக சில அவதூறுகளை வெளியிடும் வகையில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் முடிவுகளை எடுக்கும் தலைவர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் வெளியாகும் சில பத்திரிகைகளின் அட்டை பக்கங்களை விலை கொடுத்து வாங்கி இருப்பதாக அறிகின்றேன். தனது அவதூறுகளுக்கு நான் பதில் வழங்குவதற்கு சந்தர்ப்பம் வழங்காமல் இருக்கும் வகையில் மிகவும் தந்திரமான நகர்வு என்று தான் கருதும் செயல் ஒன்றை அவர் செய்திருப்ப தாக நான் அறிகின்றேன். தான் மட்டும் தான் புத்திசாலி என்று நினைத்துக் கொண்டிருக்கும் இந்த நபர் எமது மக்கள் எவ்வளவு புத்திசாலிகள் என்பதையும் தனது சுத்துமாத்துக்கள் எமது மக்களிடம் இனியும் பலிக்காது என்பதையும் இன்னமும் உணரவில்லை போல் தெரிகின்றது. இதே நபர் சில தினங்களுக்கு முன்னர் என்னை அரசியலுக்கு கொண்டுவந்த சம்பந்தனை நான் நன்றி உணர்வு எதுவும் இன்றி அவருக்கு எதிராக செயற்படுவதாகவும் விமர்சனம் செய்வதாகவும் குறிப்பிட்டிருந்தார். நான் ஒன்றை அவருக்கு கூறி வைக்க விரும்புகிறேன். அதாவது, அரசாங்கத்திடம் பெற்றுக் கொண்ட சலுகைகள் பணத்துக்காக அவர் வேண்டுமானால் சிங்களக் கட்சிகளுக்கு நன்றியுணர்வுடன் இருக்கட்டும். ஆனால், அந்த நன்றி உணர்வை என்னிடம் அவர் எதிர்பார்க்கக் கூடாது. நான் எனது மக்களுக் கே நன்றிக்கடன் பட்டுள்ளேன்.

கர்ணன் வழியில் செஞ் சோற்றுக் கடன் தீர்ப்பதற்காக தமிழ் மக்க ளுக்கு வஞ்சகம் செய்ய நான் தயார் இல்லை என்பதை அவர் புரிந்து கொள்ளவேண்டும்.

ஆகவே என தருமை மக்களே, நாம் ஒருபோதும் தமிழ் மக்களின் உரிமைகள், நல்வாழ்வு, பாதுகாப்பு ஆகியவற்றுக்கான எமது பற்றுறுதியில் இருந்து தளரமாட்டோம். "மீனுக்கு" புள்ளடி இட்டு நல்லதொரு மாற்றத்தை தமிழர் வாழ்வில் ஏற்படுத்தும் ஆயுதங்களாக உங்கள் வாக்குகள் மாறட்டும்! எமது தமிழ் மக்களின் அரசியல் சமூக, பொருளாதார மாற்றுக்கும் கலாசார அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கும் வலுவூட்டுவதாக அவை அமையட்டும்! இனப்படுகொலைக்கு நீதியை பெற்றுத் தருவதாக அவை அமையட்டும்! உங்களை ஏமாற்றியவர்களுக்கு பாடம் புகட்டுவதாக அவை அமையட்டும்! நிதி நிறுவனங்களை உருவாக்கி மக்களின் பணத்தைக் கொள்ளை அடித்தவர்களை நிராகரிப்பதாக அமையட்டும்! தமது பிள்ளைகளின் பிறந்த நாட்களுக்கு ஜனாதிபதி, பிரதமரை அழைத்து விருந்துகொடுத்தவர்களை விரட்டுவதாக அமையட்டும்! அரசாங்கத்துக்கு முண்டு கொடுத்து சலுகைகளை அனுபவித்தவர்களுக்கு தண்டனை வழங்குவதாக அவை அமையட்டும்! இதே போலத் தான் பெரும்பான்மையினக் கட்சிகளில் இருந்து இங்கு வந்து போட்டியிடும் வேட்பாளர்களை விரட்டி அடியுங்கள். ஆகவே, மக்களே வீட்டைவிட்டு வெளியே வாருங்கள்! மீனுக்கு வாக்களியுங்கள்! என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)






# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 - 08 - 1940 | 01 - 08 - 2020 |



## இராசா தணிகாசலம்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பு மற்றும் யாழ். கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற உள்ளூராட்சி உதவி ஆணையாளரும் யாழ். மாநகரசபை ஆணையாளருமாகிய இராசா தணிகாசலம் நேற்று (01.08.2020) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசா - பிள்ளைநாயகம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிவசாமி - கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் சந்திராதேவியின் அன்புக்கணவரும் சதீசன் (DFCC வங்கி -பிராந்திய முகாமையாளர்), நர்மதா (USA) , Dr.திலீபன் (ரீழாலை அரசினர் வைத்தியசாலை -PMCU), நிமலன் (QS-அபுதாபி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் மீனா (HNB), பாலயோகன் (USA), கஜந்தா (ஆசிரியர்-யாழ்.இந்து மகளிர் கல்லூரி), சர்மிளா (ஆசிரியர்-அபுதாபி) ஆகியோரின் அன்பு மாமனாரும் அத்விகா, அஸ்விந், லயாவானதி, கீரன், அர்வின், ஆரூஷி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், சிவபாக்கியம் மற்றும் புவனேஸ்வரி, ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் அம்பிகைநாதன் காலம்சென்றவர்களான தவரத்தினம், நடராசா, ஐங்கரநாதன் மற்றும் செல்வரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (02.08.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(3463)

இல.34, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.
021 222 5175
தகவல்: குடும்பத்தினர்


விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
● மருதனர்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(C-9624)
0768226240

தேவை
வெற்றுத் தார் பரல்கள்
(வெட்டி நிமிர்த்தியது விரும்பத்தக்கது)
தொடர்புகளுக்கு :- 077 236 7451

விற்பனைக்கு
பூநகரியில் தென்னங்காணி விற்பனைக்கு உண்டு.
(3418)
தொடர்புகளுக்கு:- 077 500 0167

உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?
எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா, ஒட்டிய கன்னங்கள் குண்டுக் கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?
குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு.

தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?
தலைமுடி வளர வேண்டுமா? பேன் பொடுகு தொல்லையா? முடிகொட்டுகிறதா? இளநரையா? தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? புதிதாக முடி முளைக்க வேண்டுமா? பொன்னாங்காணி, கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக் காய்ச்சிய எண்ணைக்குளிசை
இந்த எண்ணையைப் பாவித்து பயனடைய
077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்

## வவுனியாவில்...

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என சர்வதேசம் தலையிட்டு தீர்வைப் பெற்றுத் தர வேண்டும் எனத் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தாய்மார் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியக் கொடிகளை ஏந்தியிருந்தனர். (ம-3,250)

## மக்களின் அடிப்...

கண்டியில் கல்வியாளர்கள் மன்றத்தில் உரையாற்றிய அவர், ராஜபக்ஷர்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதற்காக நல்லாட்சி அரசாங்கம் 19A ஐ அறிமுகப்படுத்தியது என்றார்.

"இது முக்கிய நோக்கமாக இருந்த போதிலும், இது மக்களின் உரிமைகளையும் மீறியது. அனைத்து தடைகளுக்கும் இடையில் 6.9 மில்லியன் மக்கள் கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக தேர்ந்தெடுத்தனர். இதனால் நாட்டிற்கான தனது திட்டத்தை ஏற்றுக் கொண்டார்" என பிரதமர் கூறினார்.

பெரமுன தெளிவான பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தைக் கைப்பற்ற அங்கீகாரம் தருமாறு அவர் மக்களைக் கேட்டுக் கொண்டார். இதனால் ஜனாதிபதியின் திட்டத்தை ஆதரிக்கும் அமைச்சரவை நியமிக்கப்படலாம்.

"இந்த முயற்சியில் படித்த, புத்திசாலி மற்றும் அனுபவம் வாய்ந்த அரசியல்வாதிகள் மற்றும் இளைஞர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே மக்களுக்கு சிறப்பாக சேவை செய்ய முடியும்" என்றும் பிரதமர் கூறினார். (ம-3)

## இன்று நள்ளிர...

டங்களை நடத்துவது, வீடுகளில் கூட்டங்களை நடத்துவது, வாக்கு சேகரிப்பதற்காக வீடு வீடாக செல்வது, துண்டுப்பிரசுரங்களை விநியோகிப்பது, அலுவலங்களில் பதாகைகளை காட்சிப்படுத்துவது, சுவரொட்டிகளை ஒட்டுவது, தட்டிகளை காட்சிக்கு வைப்பது என்பன தடை செய்யப்படுகின்றன.

இம்முறை பொதுத்தேர்தல் எதிர்வரும் புதன்கிழமை அதாவது 5ஆம் திகதி நடைபெறவுள்ளது. 225 பாராளுமன்ற ஆசனங்களை கைப்பற்ற 7 ஆயிரத்து 452 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

அங்கீகரிக்கப்பட்ட 25 அரசியல் கட்சியைச் சேர்ந்த 3 ஆயிரத்து 652 வேட்பாளர்களும், 313 சுயேட்சைக்குழுக்களை சேர்ந்த 3 ஆயிரத்து 800 வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர்.

அதிகளவான வேட்பாளர்கள் கொழும்பு மாவட்டத்திலேயே போட்டியிடுகின்றனர். கொழும்பு மாவட்டத்தில் 924 வேட்பாளர்கள் இம்முறை தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

குறைந்தளவான வேட்பாளர்கள் பொலநறுவை மாவட்டத்தில் போட்டியிடுகின்றனர். அந்த மாவட்டத்தில் 152 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்காக 12 ஆயிரத்து 894 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளதுடன் 2 ஆயிரத்து 773 வாக்கு எண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. (ம-3)

## அதிகாரப் பகிர்வு...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

அதிகாரப்பகிர்வு இடம்பெற வேண்டும். நாடு பிளவுபடக்கூடாது என்பதே நாட்டிலுள்ள பிரதான இரு கட்சிகளினதும் அரசசார்பற்ற அமைப்புகளினதும் கருத்தாக இருந்து வருகின்றது.

இக்கருத்துடன் நாம் உடன்படவில்லை. அதிகாரங்களை பகிரும் அளவுக்கு தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி என்னவென கேட்க விரும்புகின்றோம்.

1983 இல் ஐக்கிய தேசிய கட்சியின் தொழிற்சங்க பிரிவிலுள்ள குண்டர் குழுவே தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தினர்.

இதற்காக ஒட்டுமொத்த சிங்கள மக்கள் மீதும் குறைகூறுவது நியாயமா? இவ்வாறு தம்மைத் தாக்கிய தரப்பிற்கே தமிழர்கள் வாக்களித்தும் வரும் நிலைமை காணப்படுகின்றது.

அதேவேளை மாகாண சபை முறைமை முற்றாக நீக்கப்பட வேண்டும் என்பதிலும் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். அதிகாரப் பகிர்வு மட்டுமல்ல, மாகாண சபையில் உரிய வகையில் நிர்வாகம் இடம்பெறுவதில்லை. உறுப்பினர்களுக்கு சம்பளம் வழங்குவதற்காக பெருமளவு நிதி செலவிடப்படுகிறது. இவை உட்பட மேலும் சில காரணங்களினாலேயே நாம் மாகாண சபை முறைமைக்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளோம்.

நாம் ஒரு போதும் தன்னாட்சியை ஏற்கப் போவதில்லை. ஒற்றையாட்சி முறைமையே தொடர வேண்டும். அதி காரங்களைப் பகிர்ந்தால் தனி நாட்டை நோக்கி பயணிக்க வேண்டிய நிலை உருவாகும் என்றார். (ம-3)

# இராணுவத் தளபதி சவேந்திர சில்வா யாழுக்கு இன்று திடீர் விஜயம்

## பாதுகாப்பு கெடுபிடிகள் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு இன்று இராணுவ தளபதி சவேந்திர சில்வா திடீர் விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்த நிலையில் யாழ் குடாநாடு முழுவதும் படையினரின் சோதனை நடவடிக்கை அதிகரித்து காணப்பட்டது.

தேர்தல் பிரசார இறுதி நாட்களில் தொடர் பரப்புரைகள் இடம்பெற்றுவரும் நிலையில், நேற்றும் நேற்று முன்தினமும் இடம்பெற்ற கடுமையான சோதனை நடவடிக்கைகளால் மக்கள் அச்சம் மற்றும் விசனம் அடைந்திருந்தனர்

இராணுவத்தால் நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சி ஒன்றின் இறுதி விழா (Jaffna got talents) இன்று பிற்பகல் 1.30 மணிக்கு யாழ் தந்தை செல்வா சதுக்கத்தில் நடைபெறவுள்ளது.

அந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக இராணுவத் தளபதி வருகை தரவுள்ளார்.

இந்த நிலையில் இராணுவத்தினரின் சோதனை நடவடிக்கைகள் அதிகரித்து காணப்பட்டமை தொடர்பில் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ம-3,9)

## தமிழ்த் தலைமை...

தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் பின்னர் தமிழ்த் தரப்புக்கு வலுவான அரசியல் தலைமை அமையவில்லை. அதன் காரணமாக போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை என்ற விடயம் மௌனித்துள்ளது.

ஆனால் நடைபெறப் போகும் பாராளுமன்றத் தேர்தலில் அதிக வாக்குகளைப் பெற்று நீதியரசர் விக்னேஸ்வரன் தமிழ் அரசியல் தலைமையைப் பொறுப்பேற்பாராயின் அவரை சலுகைகளால் சமாளிக்க முடியாது.

தவிர, சி.வி.விக்னேஸ்வரன் இந்த நாட்டின் நீதியரசராக இருந்தவர்.

எனவே ஓய்வுபெற்ற நீதியரசர் ஒருவர் தமிழ் மக்களுக்காகப் பாராளுமன்றத்தில் நீதி கேட்கும்போது, அது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கனதியான தாக்கத்தை ஏற்படுத்தும்.

இதற்கு மேலாக, நீதியரசர் விக்னேஸ்வரனுக்கு சர்வதேச சமூகத்தில் நிறைந்த மதிப்பு இருப்பதால் அவர் வெளிநாடுகளுக்குச் சென்று தமிழர்களின் பிரச்சினைகளை எடுத்துக் கூறுவது சிங்கள ஆட்சி அதிகாரங்களுக்கு நல்லதாக அமையாது.

ஆகவே எம்மோடு ஒத்துழைக்கக் கூடிய தமிழ்த் தரப்புகளின் உதவியோடு நீதியரசர் விக்னேஸ்வரனின் வெற்றிப்பெருக்கை தடுக்க வேண்டும் என்றும் சிங்களப் புத்தி ஜீவிகள் தமது முகநூல்கள் வாயிலாக கருத்துரை செய்துள்ளதான தகவல்கள் பரவலாக வெளி வந்துள்ளன. (ம-3)


பாராளுமன்றத் தேர்தல் - 2020

(யாழ்ப்பாணம், கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்)

"மக்களின் ஆணையே எமக்குத் தேவை
மாற்றத்தைப் பெற்றுத்தருவது எமது பொறுப்பு"

டக்ளஸ் தேவானந்தா
(செயலாளர் நாயகம்-ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி)



5



1

ஐயாத்துரை
ஸ்ரீரங்கேஸ்வரன்
(ரங்கன் தோழர்)

(பருத்தித்துறை பிரதேச சபை முன்னாள் தவிசாளர்/ கட்சியின் யாழ்.மாவட்ட உதவி நிர்வாக செயலாளர்)

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி
(ஈ.பி.டி.பி)

X

(C-251)


## தொடரும் பரிசில்கள்

சுன்னாகம் லொத்தர் விற்பனை முகவர் பாலசுந்தரம் சண்முகதாஸ் விற்பனை ஊடாக 31/07/2020 இல் **மெகாபவர்** சீட்டிழுப்பு 0567 றோ ஊடாக 100,000/=வும் **அதகோடிபதி** விசேட சீட்டிழுப்பு 997 றோ ஊடாக 100,000/=வும் ஒரே நாளில் வெல்லப்பட்டுள்ளது. இதேவேளை சாவகச்சேரி சந்தை உட்புற விற்பனை முகவர் ஊடாக 24/07/2020 **கொவிசெத** 2494 றோ ஊடாக 100,000/= வும் வெல்லப்பட்டுள்ளது. மேலும் மல்லாகம் விற்பனை முகவர் ஊடாக 4182 றோ **மகாஜன** சீட்டிழுப்பில் 100,000/= வும் 991 றோ **அதகோடிபதி** சீட்டிழுப்பு ஊடாக 100,000/=இம்மாதம் வெல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (3465)


ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 01.08.2020 சீட்டிழுப்பு இலக்கம் 1042

F 1 4 8 1 9 6

தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB

சீட்டிழுப்பு திகதி 01-08-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2496

ஆங்கில எழுத்து U வெற்றி இலக்கங்கள் 10 56 65 79

தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத

திகதி 2020/08/01
சீட்டிழுப்பு இலக்கம் 4201

ஆங்கில எழுத்து L வெல்லப்பட்ட இலக்கங்கள் 1 0 1 4 0 9

தேசிய லொத்தர் சபை

சுபிரி வாசனா

சீட்டிழுப்பு திகதி 2020/08/01 1522 சீட்டிழுப்பு இலக்கம்

சுப்பர் இலக்கம் 10 வெற்றி இலக்கங்கள் 03 21 50 62

2nd chance இலக்கங்கள் 0 7 7

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

மெகா பவர்

திகதி 01/08/2020
சீட்டிழுப்பு இலக்கம் 568

வெற்றி எழுத்து E சுப்பர் இலக்க 17 வெற்றி இலக்கங்கள் 04 44 69 75

SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1185
சீட்டிழுப்பு திகதி 01.08.2020 நீலம்

G 06 21 48 51

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,395,028

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI

சீட்டிழுப்பு இல: 998
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2020.08.01

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 57,494,180/-

வெற்றி இலக்கங்கள் 05 31 63 65 ஆங்கில எழுத்து Q

அபிவிருத்தி லொத்தர் சபை

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

சீட்டிழுப்பு இல.: 3345 திகதி: 2020.08.01
பச்சை சனிக்கிழமை

SATURDAY FORTUNE

வெற்றி இலக்கங்கள் 26 45 56 62 ஆங்கில எழுத்து F

அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் ரூ. 35,161,498/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அவசர நிதி அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ராசி அதிர்ஷ்டம்

வெற்றி வாரம் 2879 வர்ணம் இளம் நீலம் திகதி 01.08.2020

வெற்றி இலக்கங்கள் 04 09 19 29 இடபம்

எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 4,025,857

6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

# ஐ.தே.க. வேட்பாளர் பெரமுனவில் இணைந்தார்

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி சார்பில் போட்டியிடவிருந்த மற்றொரு வேட்பாளர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இணைந்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சி சார்பில் மாத்தறை மாவட்டத்தில் போட்டியிடுதற்காக வேட்பு மனு தாக்கல் செய்திருந்த அச்சிர இலங்கமக என்ற வேட்பாளரே இவ்வாறு கட்சி தாவியுள்ளார்.

இவர் நேற்று சனிக்கிழமை பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிப் பதாகத் தெரிவித்து பொதுஜன பெரமுன வில் இணைந்து கொண்டுள்ளார்.

மாத்தறை மாவட்டத்தில் போட்டிடுவதற்காக வேட்புமனு தாக்கல் செய்த பின்னர் கட்சி மாறிய மூன்றாவது வேட்பாளர் இவர் ஆவார்.

இவருக்கு முன்னர் சந்தன பிரியந்த மற்றும் எஸ்.டபிள்யு.பிரேமரத்ன ஆகிய ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளர்களும் இவ்வாறு பொதுஜன பெரமுவில் இணைந்து கொண்டனர் என்பது குறிப்பிடத் தக்கதாகும். (ம-3)















இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



# நிஸங்க சேனாதிபதி பாலித பெர்னாண்டோவிற்கு எதிரான வழக்கிற்கு இடைக்கால தடை உத்தரவு



(கொழும்பு)

அவன்காட் நிறுவனத் தலைவர் நிஸங்க சேனாதிபதி மற்றும் பாலித பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிரான அவன்காட் நிறுவன வழக்கிற்கு இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு தொடர்பாக கொழும்பு உயர் நீதிமன்றில் இடம்பெறும் விசாரணைகளை இடைநிறுத்தவே மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

அவன்கார்ட் தலைவர் நிஸங்க சேனாதிபதி மற்றும் ரக்ன லங்காவின் முன்னாள் தலைவர் மேஜர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிராக 2017 ஆம் ஆண்டு இலஞ்ச வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த பரிவர்த்தனையின் போது 35.5 மில்லியன் ரூபாய், இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடி குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டன.

இதனையடுத்து கடந்த ஆண்டு ஒக்டோபரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிஸங்க சேனாதிபதி தொடர்ந்து ஜனவரி மாதம் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அவன்கார்ட் தலைவர் நிஸங்க சேனாதிபதி மற்றும் ஏழு பேருக்கு எதிராக அவன் கார்ட் ஆயுத கடத்தல் வழக்கில் சட்டமா அதிபர் கடந்த செப்டெம்பர் மாதம் குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்திருந்தார்.

குறிப்பாக இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது சட்டமா அதிபர் சார்பாக 7 ஆயிரத்து 573 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

இந்த வழக்கை சட்டவிரோதமானது என்று அறிவிக்குமாறு நிஸங்க சேனாதிபதி மற்றும் பாலித பெர்னாண்டோ ஆகியோரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணிகள் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் முன்னர் கோரிக்கை ஒன்றினை விடுத்தனர்.

இலஞ்சம் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவில் இரு ஆணையாளர்களின் எழுத்து மூலமான ஒப்புதல் இல்லாமல் இது தாக்கல் செய்யப்பட்டது எனக் கூறப்பட்டது.

இருப்பினும் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சம்பா ஜானகி ராஜரத்ன இந்த ஆரம்ப ஆட்சேபனையை நிராகரித்து வழக்கை தொடர உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து இலஞ்ச ஆணைக்குழு பணிப்பாளர் நாயகத்தினால் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் சட்டத்தின் 17, 19, 21 மற்றும் 25 பிரிவுகளின் கீழ் குற்றம் சாட்டப்பட்ட இருவர் மீதும் 47 குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# கொவிட்-19 சமூக பாதுகாப்பு நிதிய வைப்பு மீதி ஆயிரத்து 549 மில்லியனாக அதிகரிப்பு

(கொழும்பு)

தனிப்பட்ட நிறுவன அன்பளிப்புகள் மற்றும் நேரடி வைப்புகளுடன் "இடுகம" கொவிட் - 19 சுகாதார. சமூக பாதுகாப்பு நிதியத்தின் வைப்பு மீதி ஆயிரத்து 549 மில்லியனாக அதிகரித்துள்ளது.

ஸ்ரீ நாகல ரஜமகா விகாராதிபதி சங்கைக்குரிய வரத்தன தம்மானந்த தேரர் ஒரு இலட்சம் ரூபாவையும் திம்புல ஆரன்ய சேனாசனாதிபதி சங்கைக்குரிய தொலுவே தம்மரத்தன தேரர் 25 ஆயிரம் ரூபாவையும் கொட்டவகம ஸ்ரீ போதி ராஜாராம விகாராதிபதி சங்கைக் குரிய யட்டலமத்தே தம்மிஸ்ஸர தேரர் 60 ஆயிரம் ரூபாவையும் வடமேல் மாகாண சபையின் அரச அதிகாரிகள் 2 கோடியே 26 இலட்சத்து 86 ஆயிரத்து 240 ரூபாய் 82 சதமும் எச்.எம்.கமல் குமார ஹேரத் 45 ஆயிரத்து 39 ரூபாய் 80 சதமும் எஸ்.எஸ். பி.எம்.கிரிபண்டா 5 ஆயிரம் ரூபாவையும் மற்றும் எஸ்.ஜே. அசங்க மதுசங்க 5 ஆயிரம் ரூபாவையும் நிதியத்திற்கு அன்பளிப்புச் செய்தனர். குறித்த அன்பளிப்புகள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

செல்வி.பி.டி.கோகிலா செவ்வந்தி 833 ரூபாவையும் செல்வி. என்.எம்.மினுதி சிகஷ்னா நாயக்க 3 ஆயிரத்து 27 ரூபாவையும் சிறுவன் ஏ.எம்.சனுக்க மிஹி ஜெய அதிகாரி ஆயிரத்து 251 ரூபாவையும் டபிள்யூ.ஜி.பகன்தி இமாஷா 966 ரூபாவையும் சமல் சந்து பண்டார மற்றும் சகுந்த கிகன்த ஆயிரத்து 7 ரூபாவையும் தமது பண உண்டியல்கள் மூலம் ஜனாதிபதியிடம் கையளித்தனர்.

தற்போது இடுகம கொவிட் - 19 சுகாதார. பாதுகாப்பு நிதியத்தின் மீதி ஆயிரத்து 549 மில்லி யன் ரூபாவாகும்.

உள்நாட்டு, வெளிநாட்டு நன்கொடையாளர்கள் இக்கணக்கிற்கு பங்களிப்புச் செய்து வருகின்றனர்.

காசோலைகள் அல்லது டெலிகிராப்கள் மூலமும் www.itukama.lk என்ற இணையத்தளத்தின் ஊடாகவோ அல்லது #207# என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பங்களிப்பை செய்ய முடியும். 076 070 0700/ 011 232 0880/ 011 235 4340/ 011 242 4012 என்ற இலக்கங்களுடன் தொடர்புகொண்டு மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ள முடியும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (ஜ-4)


## சேவை


நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்க முடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகுவைத்த நிறுவனத்திற்கு வருகைதந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவிய ரீதியில் சிநேக பூர்வமான சேவை AAA Gold Center

076 568 4346 (C-973)


## மரண அறிவித்தல்

### அமரர்.ஜோசேப் அந்தோனிப்பிள்ளை

**தோற்றம்:- 1939.01.21**
**மறைவு:- 2020.07.31**



மானிப்பாயை பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட ஜோசேப் அந்தோனிப்பிள்ளை அவர்கள் 31.07.2020 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோசேப் - மாக்கிறேட் தம்பதியரின் அருமைப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - பிலிப்பாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பெர்ணபேற்றம்மாவின் அன்புக் கணவரும் அமரர் செங்கோல்ராஜா மற்றும் பஸ்ரியாம்பிள்ளை (லண்டன்), இராக்கினியம்மா, யேசுதாசன் (அவுஸ்திரேலியா), லூசியா ஆகியோரின் பாசமிகு அண்ணனும் மேரியூக்கிறேசியா (தேவி), ஜெயமணி, அமரர் லூசியா பிறக்சிற் (மணி) மற்றும் அலோசியஸ் (சமாதான நீதவான்), அமரர்களாக அத்திநேசுப்பிள்ளை, அத்தினாசு, சிங்கராயர் மற்றும் லோரேஞ்சியா (துரை), புலேந்திரன் (பாலசிங்கம்) - கனடா, பாக்கியநாதன் (சுருக்கர்), பபிலப்பு (இராசநாயகம்) ஆகியோரின் பாசமிகு மைத்துனனும் அருள்தாசன், அருள்மேரி, அருள்நேசன் (சுவிஸ்), ஜெயசீலி (ஜேர்மனி), ஜெயமணி ஆகியோரின் அன்புத்தந்தையும் மேரிகிறேஸ், செல்வமாணிக்கம், பற்றீசியா, ஜோன் சென் ஜோச், சூசைதாசன் ஆகியோரின் அன்பு மாமனாரும் மேரிகம்சனா, கௌசிகா, மேருஜா, சதீசன், நிசான், ஜான்சி, பிறின்சிகா, றெபினா, றொசில்டா, ஜெசிந்தா, ஜெரமி, சுஜித்தா, ஜெசில்டா, சுலக்சி, ஜென்சிகா, ஜோன் மேரி ரமேஸ், றொபேட் வின்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைத் திருப்பலி 03.08.2020 (திங்கட்கிழமை) நாளை மு.ப.9.00 மணிக்கு புனித அன்னாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் காக்கைதீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(3459)

ஆனைக்கோட்டை | 077 283 2881 / 077 539 9985 | தகவல்:- குடும்பத்தினர்.


## கேள்விப்பத்திரம் கோரல்

**யாழ்.மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் (வ.து)**
**கடைத்தொகுதி வாடகைக்கு விடுதல், நிலம் குத்தகைக்கு வழங்குதல்.**

எமது சமாச வளாகத்தின் உட்பகுதியில் அமைந்துள்ள அரை நிரந்தர கட்டடக் கடைத்தொகுதிகளை வாடகைக்கு வழங்குவதற்கும் இக்கடைத் தொகுதிகளுக்கு அருகாமையிலுள்ள நிலத்துண்டுகளை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கும் கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது.

கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்க விரும்புவோர் அலுவலக நேரத்தில் சமாச பொதுமுகாமையாளருடன் தொடர்பு கொண்டு கடைத்தொகுதிகளை பார்வையிடலாம். அலுவலக நேரத்தில் மாதிரி விண்ணப்பப்படிவத்தினை பெற்று பூர்த்தி செய்து கடித உறையின் இடதுபக்க மேற்பக்கத்தில் "கடைத் தொகுதிக்கான கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிட்டு பதிவுத்தபாலில் 15.08. 2020 ஆம் திகதிக்கு முன் தலைவர், யாழ்.மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம், இல.95, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல், நிராகரித்தல் தொடர்பில் சமாசத்தின் பணிப்பாளர் சபையின் முடிவே இறுதியானதாகும்.

(C-9982)

**தலைவர்,**
**யாழ்.மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் (வ.து)**
**யாழ்ப்பாணம்.**



## தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஓர் பிரபல சேவை வழங்கும் நிறுவனத்திற்கு யாழ்.மாநகர எல்லைக்குள் 4000 சதுர அடியில் கட்டட வசதியும் மேலதிகமாக வாகன தரிப்பிட வசதியுடன்கூடிய இடமும் தேவை. 5 தொடக்கம் 10 ஆண்டு கால குத்தகை விரும்பத்தக்கது. மேலதிக தகவல்களுக்கு 070 366 3600 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (C-9977)



# சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த வேண்டும்

## பாதுகாப்பு செயலாளர் திட்டவட்டம்

(கொழும்பு)

**சட்டத்தை கடுமையாக அமுல்படுத்துவதன் மூலம் மனிதனால் உருவாக்கப்படும் அச்சுறுத்தல்களைக் கட்டுப்படுத்த அரசாங்கம் தன்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.**

சட்டஅமுலாக்கமுறைமையை ஒழுங்குபடுத்தியதன் மூலம் அண்மைக்காலங்களில் சட்ட விரோத நடவடிக்கைகளை முகாமை செய்ய முடிந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் பாதுகாப்பு அமைச்சினது அதிகாரிகளின் வகிபாகம் தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிலையான அபிவிருத்தி இலக்குகள் என்பது ஒவ்வொரு பெண் மற்றும் பெண் குழந்தைகள் உட்பட நாட்டின் அனைத்து பிரஜைகளினதும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் வன்முறையற்ற சூழலில் ஒவ்வொரு குழந்தையும் வளர்வதனை உறுதி செய்யும் வகையிலும் சட்டத்தின் ஆட்சி இடம்பெறும்நாட்டினை குறிக்கும்.

இந்த விடயங்களே தேசிய பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கும் அரசாங்கத்தின் கொள்கை கட்டமைப்பின் கீழ் பாதுகாப்பு அமைச்சின் செயற்பட்டியலில் உள்ளடக்கப்பட வேண்டிய மிக முக்கிய அம்சங்களாகும்.

காலநிலை மாற்றம், சுற்றுச் சூழல் மாசுறுதல் மற்றும் வளங்கள் அழிவடைதல், தொற்று நோய்கள், இயற்கை பேரழிவுகள், உணவுப் பற்றாக்குறை போன்ற இயற்கை அச்சுறுத்தல்கள், சட்டவிரோத குடிபெயர்வு, துப்பாக்கிப் பாவனை, ஆட்கடத்தல், போதைப்பொருள் கடத்தல் மற்றும் இலகு, நடுத்தர மற்றும் உயர் தீவிரத்தன்மையான முரண்பாடுகள்போன்ற மனிதனால் உருவாக்கப்படும் அச்சுறுத்தல்கள் என்பன அரசாங்கத்தினால் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்களாகும்.

அரச அதிகாரிகள் என்ற வகையில் நமக்குக் கிடைக்கக் கூடிய அனைத்து வழிகளிலும் நமது முழுமையான ஒத்துழைப்பை தேசியக் கொள்கைத் திட்டத்திற்கு வழங்க கடமைப்பட்டுள்ளோம்.

எமது அதிகார வரம்புக்குள் காணப்படும் வழிகளை அடையாளம் காண, தற்காலத்திலும் எதிர்காலத்திலும் மக்களின் அமைதியான மற்றும் செழிப்பான வாழ்க்கைக்கான முன்மொழிவுத் திட்டத்தை அளிக்கக்கூடிய நிலையான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக நாம் ஒரு நல்ல புரிதலைக் கொண்டிருக்க வேண்டும்.

ஒரு தேசம் என்ற வகையில், நாடானது சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதோடு, சமூக நீதியை ஊக்குவிப்பதிலும் பொருளாதார செழிப்பை வளர்ப்பதிலும் உலகளாவிய முயற்சிகளுக்கு அதன் உறுதிப்பாட்டை நிரூபித்துள்ளது.

அமைதி, நீதி மற்றும் சமமான அபிவிருத்தி உள்ளிட்ட உலகளாவிய நிகழ்ச்சி நிரல் ஊடாக இலங்கையின் அபிவிருத்திக் கொள்கையை ஏற்படுத்துவது பொருத்தப்பாடாக அமையும் என அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# எனது கட்சிக்கு அதிக ஆசனங்கள் கிடைத்தால் ஒரே இரவில் பிரச்சினைக்கு முடிவு கிடைக்கும்

## டக்ளஸ் தேவானந்தா நம்பிக்கை



(யாழ்ப்பாணம்)

எனது கட்சிக்கு ஒன்பது ஆசனங்கள் கிடைக்கப் பெற்றால் ஒரே இரவில் தமிழர்களின் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்து வைக்க முடியும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது தேசிய நல்லிணக்கம் அரசாங்கத்தோடு சுமுகமான நிலையில் உள்ளது.

அண்மையில் தமிழ் ஊடகப் பிரதானிகளுக்கும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கும் இடம்பெற்ற கலந்துரையாடலில் கூட டக்ளஸ் தேவானந்தா போன்றோரை நாடாளுமன்றுக்கு அனுப்பு மாறு தமிழ் மக்களைக் கோரியிருந்தார்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கொள்கை, பிரச்சினைகள் தீருகின்ற வகையில் அணுகுவதே.

குறைந்தளவு ஆசனங்களை வைத்துக் கொண்டும் தமிழருக்கான தீர்வை பெற்றுத்தர என்னால் முடியும்.

நான் கடந்த காலங்களில் பல விடயங்களைச் செய்துள்ளேன்.

என்னால் இப்போதும் செய்ய முடியும். எம்மிடம் யதார்த்தமான நடைமுறை சார்ந்த கொள்கை மாத்திரமல்ல அதை நோக்கிய வேலைத்திட்டமும் உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2-8)

# மகப்பேறுக்காக அனுமதிக்கப்பட்ட பெண் பலி;ஐவர் கைது

(கல்முனை)

மகப் பேறுக்காக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பெண் இறந்தமை தொடர்பாக கல்முனை ஆதார வைத்திய சாலை முன்பாக அமைதியின்மை ஏற்பட்டது.

நேற்றுப் பிற்பகல் குறித்த வைத்தியசாலைக்கு முன்னால் ஒன்றுகூடிய இறந்த பெண்ணின் உறவினர்கள், பொதுமக்கள் இணைந்து நீதியைப் பெற்றுத்தரக் கோரியும் வைத்தியரின் அசமந்த நிலையையும் கூறி அமைதியின்மையை ஏற்படுத்தியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து வைத்தியசாலையின்முன்னால் அமைதியின்மை நிலையினை ஏற்படுத்தினார்கள் என சந்தேகத்தின் பேரில் 5 பேர் கல்முனை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டுள்ளனர். (ஜ-4)




## வினைகளைச் சீக்கிரமே போக்கிடும் நல்லூரானே...

நல்லூரில் வீற்றிருந்து
பக்தர்களினை காத்தருள் புரியும்
பரமதயாளனே எங்கள் நல்லூர் நாயகனே
சரவணப் பொய்கையில் வந்துதித்த
சண்முகப் பெருமானே

விரைந்தோடி வந்திடுவாய் எம்மருகே
வினைகளைத் தீர்த்து நிம்மதியான
வாழ்வொன்றினை தரமாட்டாயா - எங்கள்
நல்லையம்பதி தனில் வந்துதித்த
அலங்காரக் கந்தனே

காயத்திரி விக்கினேஸ்வரன்,
மடத்தடி, சாவகச்சேரி.

## நல்லூரானே நீ துணை

அமுதினும் இனிதான அழகே வடிவான
அரும்பெருந்திருவுருக் கொண்டு
அவனியுய்ய வந்து தித்த
ஆறுமுகப் பெருமானே

ஐயன் நெற்றி கண் பிறந்து
அன்னையணைப்பால் ஒன்றிணைந்த
அருந்தமிழர் பெருந்தெய்வமே
ஆனைமுகன் அன்புத்தம்பியே

நன்னெறிக்குய்ப்பது நலம் வேண்டியுன்
நானிலம் சிறப்பதும் உன்னருளன்றோ
நாதியற்று வாடுதய்யா இங்கே தமிழ்
நாவினிக்க மொழி தந்த நல்லூரானே நீ துணை

சி. திவ்வியா.

## பெரும் பேறு அருளிடய்யா

நல்லை நகர் மாமணியே
நயத்துடனே நாடி வந்திடய்யா
எம் சோதனைகள் வேதனைகள் தீர
போட்டி பொறாமை வஞ்சனை
சூது வாது வெஞ்சினம் மமதை
பதவி மோகம் பொய் பித்தலாட்டம்
அஞ்ஞானம் அகன்றிடவே இன்றே
சுவாமிக்கே நாதனாகி வீறு கொண்டு
உடனே எழுந்திடய்யா
ஆணவங் கொண்ட ஆன்மாக்களை
வாட்டியே விரைந்தோட நல்லநகர்
கோமனே விரைந்து பெரும் பேறு
அருளிடய்யா

எஸ்.எஸ்.உமாசிவம், ஏழாலை.

## சந்தம் சிந்தும் நல்லைக் கந்தன்

அண்டம் யாவும் அண்டத் தாங்கும்
ஐயன் முருக மூலனை
கண்டு ணர்ந்த தொண்டர் பாரிற்
கடுக வெல்வர் காலனை
பண்டு தொட்டு எம்மிற் பட்டு
பரவும் விரவும் பாலனை
கொண்டு நிற்க வூமும் மாளும்
கோலன் நல்லைக் கந்தனே!

கலாபூஷணம் சந்தக்கவிஞர்.
நவ.பாலகோபால்

# மகிந்த ராஜபக்ஷவுடன் டீல் பேசியவர் நண்பர் சரவணபவன்

## சிரேஷ்ட சட்டத்தரணி சிறீகாந்தா காட்டம்

**(யாழ்ப்பாணம்)**

**இரண்டு வருடங்களுக்கு முன்பு ராஜபக்ஷக்களுடன் "டீல்" பேசியவர் சரவணபவன். அவருடைய திட்டமிட்ட பொய்களுக்கு காலம் விரைவில் பதில் சொல்லும் எனத் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் வேட்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ந.சிறீகாந்தா தெரிவித்தார். யாழில் நேற்று இடம்பெற்ற ஊடக சந் திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்.

2018 ஆம் ஆண்டு ஐப்பசி மாதத்தில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மைத்திரிபால சிறிசேனவால் திடீரென பதவி நீக்கம் செய்யப்பட்டு மகிந்த ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்பட்டார். அவரிடம் பாராளுமன்றப் பெரும்பான்மை இருக்கவில்லை.

தமிழ், முஸ்லிம் எம்.பிக்களுக்கு வலை வீசி, விலைபேசி அவர்களை இழுத்தெடுக்கும் நடவடிக்கைகள் மகிந்த தரப்பினால் முன்னெடுக்கப்பட்டன. கூட்டமைப்பு எம்.பிக்கள் சிலரோடும் "டீல்" பேசும் படலம் ஆரம்பித்தது. அதில் முதலில் சிக்கியவர் வியாழேந்திரன்.

கட்சி தாவி ராஜபக்ஷவுடன் போய்ச் சேர்ந்த அவருக்கு இராஜாங்க அமைச்சர் பதவி வழங்கப்பட்டது.

அந்த நேரத்தில் கொழும்பில் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழு அவசரமாகக் கூடியது. அதற்கு முன்னதாக மகிந்தவின் அழைப்பின் பேரில் சம்பந்தன் சென்று அவரை சந்தித்திருந்தார்.

சில கோரிக்கைகளை மகிந்தவிடம் தெரிவித்ததாக சம்பந்தர் கூறினார். நீங்கள் மகிந்தவை சந்தித்திருக்கக் கூடாது. அவர் பின்கதவு வழியால் பிரதமர் ஆக்கப்பட்டிருக்கிறார். எதிர்க்கட்சித் தலைவரான நீங்கள் சந்தித்தால் அது அவரை பிரதமராக நாங்கள் அனைவரும் அங்கீகரிப்பதாக அமைந்து விடும்.



உங்கள் இடத்தில் நான் இருந்திருந்தால் நான் ஒரு போதும் மகிந்தவிடம் போயிருக்க மாட்டேன் என்று அவருக்கு நேரடியாகக் கூறினேன்.

ரணில் விக்கிரமசிங்கவின் பதவி நீக்கத்தை சட்டவிரோதமானது என்று அறிவிப்பது என முடிவெடுத்தோம். அத்துடன் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்ட மகிந்தவின் அரசை எதிர்ப்பது எனவும் முடிவு செய்தோம்.

சரவணபவன் மகிந்தவுக்கு ஆதரவு தெரிவிக்க முன்வந்திருக்கிறார் என்றும் அவருடன் டீல் பேசப்படுகிறது என்றும் சரவணபவன் பெருந்தொகையான பணத்துடன் அமைச்சர் பதவியையும் கோரி இருக்கிறார் என்றும் அவர் கூறினார். அத்துடன் அடுத்த தேர்தலில் தேசியப் பட்டியலில் தன்னை எம்.பியாக மகிந்த தரப்பு நியமிக்க வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளதாக சுமந்திரன் கூறினார்.

எமது கூட்டறிக்கையில் மகிந்தவுக்கு ஆதரவளிப்பதில்லையென நாம் திட்டவட்டமாக தெரிவித்தோம். இதனை தொடர்ந்து முஸ்லிம் காங்கிரசும் எம்மைப் பின்பற்றத் தீர்மானித்தது. மகிந்தவுக்கு பெரும்பான்மை கிடைக்காது என்பது உறுதியானது.

சரவணபவன் மகிந்தவிடம் பேசிய டீலும் கைவிடப்பட்டது. இந்த இலட்சணத்தில் சரவணபவன் டீல்களைப்பற்றிப் பேசக் கூடாது. மனச்சாட்சி இருந்தால் அவர் ஒழுங்காக நடக்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் 2010 இல் சிவாஜிலிங்கம் போட்டியிட்டது ஏன் என்பது எல்லோருக்கும் தெரியும்.

போர்க் குற்றவாளிகளான மகிந்த ராஜபக்ஷவையோ அல்லது சரத்பொன்சேகாவையோ ஆதரிக்கக் கூடாது என்பதில் தமிழ்த் தரப்பில் நாம் உறுதியாக இருந்தோம்.

இந்த நிலைப்பாடு சரியானது என்பது பின்னர் வந்த நிகழ்வுகளால் உறுதிப்படுத்தப் பட்டது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் தரப்பில் பொது வேட்பாளர் ஒருவர் நியமிக்கப்பட பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதை முன்னெடுத்தவர்கள் கட்சி சார்பற்றவர்கள்.

கூட்டமைப்புக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள கட்சிகளோடு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. ஆனால் ஒரு தமிழ் வேட்பாளர் போட்டியிட வேண்டும் என்பதில் கருத்தொற்றுமை காணப்படவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தமிழ்க் கட்சிகளை அழைத்துப் பேசியது. பல சுற்றுப்பேச்சுவார்த்தைகள் நடந்தன். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் மூன்று பிரதான சிங்கள வேட்பாளர்களிடமும் தமிழர் தரப்பின் கோரிக்கைகளை சமர்ப்பித்துப் பேச வேண்டும் என்ற அடிப்படையில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

பேச்சுவார்த்தையின் இறுதி நாளில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விதித்த ஒரு நிபந்தனை மற்றக் கட்சிகளால் ஏற்கப்படவில்லை. இக்கட்சிகள் ஒரு உடன்பாட்டிற்கு வந்தன. ஆனாலும் பிரதான சிங்கள வேட்பாளர்களுடன் பேசுவது கைகூடவில்லை.

கோட்டாபய பேச விரும்பவில்லை. சஜித் பிரேமதாஸாவும் பின்னடித்தார். இந்நிலையில் தமிழரசுக்கட்சி கூட்டமைப்பின் ஏனைய கட்சிகளுடன் கூட ஆலோசிக்காமல் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதாக அறிவித்தது.

இதில் நாம் அதிருப்தி அடைந்து ரெலோ தலைமைக் குழுவைக் கூட்டினோம்.

சஜித் பிரேமதாஸ வெற்றி பெறுவதை ரணில் விரும்பவில்லை என்பது எங்களுக்கு தெரிந்திருந்தது. அவரின் தூண்டுதலால் தான் தமிழரசுக் கட்சியின் தன்னிச்சையான முடிவு மேற்கொள்ளப்பட்டதாக நாம் நம்பினோம்.

ஏனெனில் எவரை ஆதரித்தாலும் அந்த முடிவை நேரத்தோடு அறிவிக்காமல் தேர்தலுக்கு ஒரு சில தினங்கள் முன்பே அறிவிக்க வேண்டும் என்று சுமந்திரன் ஏற்கனவே மாணவர் ஒன்றியக் கூட்டத்தில் கூறியிருந்தார். அப்படி அறிவித்தால் நாம் ஆதரிக்கும் வேட்பாளருக்கு எதிராக மற்றத்தரப்பு இதனை உபயோகித்து அவரைத் தோற்கடித்து விடும் என்றும் அவர் எச்சரித்திருந்தார். ஆனால் இதற்கு மாறாக தமிழரசுக் கட்சி நடந்து கொண்டது.

ரெலோவின் தலைமைக் குழுக்கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் அறிவிப்பு எல்லோராலும் தீவிரமாகக் கண்டிக்கப்பட்டது. இருந்தும் பெரும்பான்மையானோர் தமிழரசுக் கட்சியுடன் இசைந்து செல்லவே விரும்பினர். பாராளுமன்றத் தேர்தலை அவர்கள் மனதில் கொண்டிருந்தனர்.

ரணில் தமிழரசுக் கட்சி கூட்டுச்சதிக்கு எதிராக சிவாஜிலிங்கத்தை ஆதரிக்க வேண்டும் என்ற பிரேரணை தோற்கடிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நான் சிவாஜிலிங்கத்தை ஆதரிக்க முடிவெடுத்தேன். இதுதான் உண்மையில் நடந்தது.

சஜித்தை தோற்கடிக்க ரணில் தரப்பு செய்த சதியால் தான் கோட்டாபயவிற்கு எதிர்பாராத பாரிய பெரும்பான்மை கிடைத்தது. ஐக்கிய தேசியக் கட்சியும் பிளவுபட்டது.

ஆனால் ராஜபக்ஷக்களுடன் டீல் பேசிய சரவணபவன் நீதியரசர் விக்கினேஸ்வரன்னையும் அநாவசியமாக வம்புக்கு இழுக்கின்றார். எல்லாவற்றிற்கும் காலம் விரைவில் பதில் சொல்லும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-8)

## ஹஜ் அனுஷ்டிப்பு



(கொழும்பு)

இஸ்லாமிய மக்கள் நேற்றைய தினம் புனித ஹஜ் பெருநாளினை கொண்டாடினர்.

அந்தவகையில் நாட்டின் பல பிரதேசங்களில் இஸ்லாமிய மக்கள் புனித ஹஜ் பெருநாளினை வெகு விமர்சையாகக் கொண்டாடினர். யாழ்.மாவட்டத்திலும் இஸ்லாமிய மக்கள் தமது பெருநாளினை சிறப்பு மிக்க பள்ளிவாசல்களில் இருந்து வழிபாடு செய்துள்ளனர். (ஜ-4)


## பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும்

காரைநகர் தெற்கு கமக்கார அமைப்பின் பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் 2020/08/14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் விளானை சன சமூக நிலைய மண்டபத்தில் நடைபெற உள்ளது. எனவே எமது பிரிவுக்கு உட்பட்ட அங்கத்துவம் பெற்ற விவசாயிகளை தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். 2020 ஆம் ஆண்டுக்கு அங்கத்துவம் பெற்றுக் கொள்ளாதவர்கள் கமக்கார அமைப்பிடம் அங்கத்துவத்தைச் செலுத்தி கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

காரைநகர் தெற்கு,
கமக்கார அமைப்பு. (3460) தலைவர்.

## ஊக்குவிப்போம்

உணவு உற்பத்திகளை ஊக்குவிப்போம். வீட்டுத் தோட்டம் செய்ய விரும்புவோர் கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக விண்ணப்பங்களை மேற்கொள்க. தனியார் நிறுவனங்கள் எழுத்து மூலமான பதிவுகளை மேற்கொள்ளவும்.

தொடர்பு:-
சிவதர்சினி பனம்பொருள்
உற்பத்தி நிறுவகம்,
நுணாவில் மத்தி, சாவகச்சேரி. (3461)

## மணமகள் தேவை

42 வயதுடைய விபத்தில் மனைவியை இழந்த Swiss Citizen தற்போது கொழும்பில் வசிக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொலைபேசி:- 0115811877
E.Mail:-
aebischerswissbern1978@gmail.com (C-974)

# 500 தலிபான் கைதிகளை விடுவிக்க அஷ்ரப்கானி உத்தரவு

(காபூல்)

நீண்டகால தாமதமான சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வழிவகுக்கும் புதிய போர் நிறுத்தத்தின் ஒரு பகுதியாக 500 தலிபான் கைதிகளை விடுவிக்க ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஷ்ரப்கானி உத்தரவிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தொடங்கி மூன்று நாட்களுக்கு தேசிய போர் நிறுத்தத்தை தூண்டியுள்ள ஈத் அல் ஆதா விடுமுறையின்போது இவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்று ஜனாதிபதி கானி கூறியுள்ளார்.

தலிபான்கள் அமெரிக்காவுடன் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளபடி 5,000 தலிபான் போராளிகளை விடுவிப்பதற்கான அரசாங்கத்தின் உறுதிமொழியை இது பிரதிபலிக்கின்றது.

ஈத் உரையில் ஜனாதிபதி அஷ்ரப்கானி கூறுகையில், 'நல்லெண்ணத்தைக் காட்டவும் சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் துரிதப்படுத்தவும் குழுவின் மூன்று நாட்கள் போர் நிறுத்த அறிவிப்புக்கு பதிலளிக்கும் விதமாக 500 தலிபான் கைதிகளை விடுவிப்போம்' எனக் கூறினார்.

இருப்பினும் விடுவிக்கப்படவுள்ள 500 கைதிகள், தலிபான்கள் கோரிய 5,000 பேரின் அசல் பட்டியலில் இல்லை எனக் கூறப்படுகின்றது.

காபூல் அதிகாரிகள் ஏற்கனவே 4,600 கைதிகளை விடுவித்துள்ளனர். ஆனால் இறுதி 400 பேரை விடுதலை செய்ய அவர்கள் தயங்குகிறார்கள். அவர்கள் மிகவும் ஆபத்தானவர்கள் என்று அதிகாரிகள் கருதுகின்றனர்.

இதனிடையே 'கடுமையான குற்றங்களில் குற்றம் சாட்டப்பட்ட அந்த 400 தலிபான் கைதிகளின் விடுதலையை முடிவு செய்ய எனக்கு உரிமை இல்லை. ஆப்கானிய மூத்த தலைவர்கள் அவர்கள் குறித்து தீர்மானிப்பார்கள்' என ஜனாதிபதி கானி கூறினார்.

இரட்டைக் கோபுரத் தாக்குதலில் தொடர்புடைய அல்கொய்தா தீவிரவாதிகளுக்கு தலிபான்கள் அடைக்கலம் கொடுத்ததன் காரணமாக ஆப்கானிஸ்தான் விவகாரத்தில் அமெரிக்கா தலையிட்டது.

அதன் பிறகு ஆப்கானுக்கு அமெரிக்கப் படைகள் அனுப்பப்பட்டன. அதன் பிறகான பல மோதல்களில் இதுவரை 2,400 அமெரிக்க வீரர்கள் உயிரிழந்துள்ளனர். 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆப்கான் இராணுவத்தினர், பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் அமைதி நிலவ வேண்டி அமெரிக்கா, தலிபான் தீவிரவாதிகளுக்கு இடையே வரலாற்றுச் சிறப்புமிக்க சமாதான உடன்படிக்கை டோஹாவில் கையொப்பமானது குறிப்பிடத்தக்கது. (2)

# சிறிய ரக விமானங்கள் மோதல்
## 7 பேர் உயிரிழப்பு



(வோஷிங்டன்)


அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணத்தில் 2 சிறிய ரக விமானங்கள் மோதிக்கொண்டதில் 7 பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணத்தில் சால்டோட்னா விமான நிலையம் அருகே நடுவானில் 2 சிறிய ரக விமானங்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்டன. இந்த விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர்.

விபத்தில் விமானத்தை தனியாக ஓட்டிச்சென்ற அலாஸ்கா மாகாண உறுப்பினர் கேரி நோப் உயிரிழந்தார்.

மற்றொரு விமானத்தில் இருந்த 4 சுற்றுலாப் பயணிகள் வழிகாட்டி விமானியும் விபத்தில் உயிரிழந்தனர். (2)

# இராணுவ வீரர் மதுபோதையில் தாக்குதல் பொதுமக்கள் 12 பேர் உயிரிழப்பு
## கண்டனம் தெரிவித்து மக்கள் ஆர்ப்பாட்டம்



(கின்ஷாசா)

கொங்கோ நாட்டில் மது போதையில் இராணுவ வீரர் நடத்திய துப்பாக்கிச்சூடு தாக்குதலில் பொதுமக்கள் 12 பேர் உயிரிழந்தனர்.

மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோ குடியரசில் உள்நாட்டுப்போர் பல ஆண்டுகளாக நடைபெற்றுவருகிறது. சண்டையில் ஈடுபட்டுவரும் கிளர்ச்சியாளர்கள் குழுக்களை ஒடுக்கவும் பாதுகாப்புக்காகவும் அந் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இராணுவம் பணியமர்த்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், அந்நாட்டின் கிவு மாகாணம் சங் நகரில் நேற்று முன்தினம் மது போதையில் வந்த ஒரு இராணுவ வீரர் தான் வைத்திருந்த துப்பாக்கியை கொண்டு வீதி மற்றும் குடியிருப்புப் பகுதிகளில் நின்று கொண்டிருந்த பொதுமக்களை குறிவைத்து கண்மூடித்தனமாக திடீர் துப்பாக்கிச்சூடு நடத்தினான்.

இந்தத் தாக்குதலை சற்றும் எதிர்பாராத பொதுமக்கள் தங்கள் உயிரை காப்பாற்றிக்கொள்ள அங்கும் இங்கும் ஓடினர். ஆனாலும், அந்த இராணுவ வீரர் தொடர்ந்து துப்பாக்கிச்சூடு நடத்தி விட்டு அங்கிருந்து தப்பிச்சென்றார்.

இராணுவ வீரர் நடத்திய பயங்கர தாக்குதலில் பொதுமக்களில் 12 பேர் சம்பவ இடத்திலேயே இரத்த வெள்ளத்தில் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 8 பேர் படுகாயமடைந்தனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த பாதுகாப்புப் படையினர் காயமடைந்தவர்களை மீட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும், துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு தப்பிச்சென்ற இராணுவ வீரரைத் தீவிரமாகத் தேடி வருகின்றனர். இந்தத் தாக்குதலுக்குக் கடும் கண்டனம் தெரிவித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (2)

# பிரபலங்களின் டுவிட்டர் கணக்குகளை ஹக் செய்த 17 வயதுச் சிறுவன்





(நியூயோர்க்)

ஒபாமா, பில்கேட்ஸ் என உலகின் மிகப்பிரபலமான 45 பேரின் அதிகாரப்பூர்வ டுவிட்டர் கணக்குகளை ஹக் செய்த விவகாரத்தில் 17 வயது சிறுவன் உட்பட 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, உலக பெரும் பணக்காரர் பில்கேட்ஸ், டெஸ்லா நிறுவன தலைவர்எலன்மாஸ்க், அமேசன் நிறுவன தலைவர் ஜேப் போனர்ஸ், அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் ஜோ பிடன் உட்பட உலகின் மிகப் பிரபலமான 45 பேரின் அதிகாரப்பூர்வ டுவிட்டர் கணக்குகள் கடந்த மாதம் 15 ஆம் திகதி மர்ம நபர்களால் ஹக் செய்யப்பட்டது.

ஹக் செய்யப்பட்ட டுவிட்டர் பக்கங்களில் இருந்து, கொரோனா வைரஸ் காரணமாக நான் என் சமூகத்திற்கு திருப்பி கொடுக்கிறேன். எனக்கு நீங்கள் அனுப்பும் அனைத்து பிட்காயின் கிரிப்போடோ கரண்சிகளும் இரட்டிப்பாக உங்களுக்கு அனுப்பப்படும். நீங்கள் 1,000 டொலர்களை எனக்கு அனுப்பினால் அது 2,000 டொலர்களாக இருமடங்காக உங்களுக்கு திருப்பி அனுப்பப்படும் என பதிவிட்டப்பட்டிருந்தது.

பிரபலங்களின் அதிகாரப்பூர்வ கணக்குகளில் இருந்து தடைசெய்யப்பட்ட பிட்காயின் தொடர்பான செய்திகள் வெளியானதால் உலகம் முழுவதும் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அதன் பின்னர் தான் பிரபலங்களின் டுவிட்டர் பக்கங்கள் மர்ம நபர்களால் ஹக் செய்யப்பட்டது தெரியவந்தது.

நீண்ட நேர போராட்டத்திற்கு பின்னர் பிரபலங்களின் டுவிட்டர் பக்கங்கள் இயல்பு நிலைக்கு திரும்பின. இந்த ஹக்கிங் ரஷ்யா அல்லது சீனாவால் நடைபெற்றிருக்கலாம் என அமெரிக்கா சந்தேகம் எழுப்பியது.

மேலும், இந்த விவகாரம் தொடர்பாக விசாரணை நடைபெற்றுவந்தது. இந்த விசாரணையில் பிரபலங்களை ஹக் செய்து அதில் பிட்காய் தொடர்பான தகவல்களை வெளியிட்டது. 3 பேர் கொண்ட இளைஞர்கள் குழு எனத் தெரியவந்தது.

புளோரிடாவைச் சேர்ந்த நிமா பாசீல் (வயது-22), இங்கிலாந்தை சேர்ந்த ஷேப்பர்டு (வயது-19) ஆகிய இருவரும் டுவிட்டர் ஹக்கிங்கில் ஈடுபட்டுள்ளனர். மூன்றாவது நபரான 17 வயது நிரம்பிய சிறுவன் தான் இந்த ஹக்கிங்கில் மூளையாக செயற்பட்டுள்ளான் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கிராகாம் கிளார் என்ற பெயருடைய 17 வயது சிறுவன் தான் இந்த மிகப்பெரிய ஹக்கிங்கின் முக்கிய காரணம் என தெரியவந்ததையடுத்து அவர்கள் அனைவரையும் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த டுவிட்டர் ஹக்கிங்கில் கிளார் குறைந்தது ஒரு இலட்சம் டொலர்கள் அளவில் முறைகேட்டில் ஈடுபட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும், இவர்கள் அனைவர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டு ஹக்கிங் செய்யக் காரணம் என்ன என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். (2)

# இதுவரை உயிரிழப்பு இல்லாத நாடு வியட்நாம்; முதலாவது உயிரிழப்பு பதிவாகியதால் பதற்றநிலை

(ஹனோய்)

வியட்நாமில் முதலாவது கொரோனா வைரஸ் உயிரிழப்புப் பதிவாகியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுவரை காலமும் கொவிட்-19 உயிரிழப்பு இல்லாத நாடு என பெருமிதம் கொண்ட வியட்நாமிற்கு இது பேரழிவு தரும் அடியாக பார்க்கப்படுகின்றது.

மத்திய நகரமான ஹோய் ஆன் நகரைச் சேர்ந்த 70 வயதான ஒருவரே நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உயிரிழந்ததாக மாநில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அண்மையில் வியட்நாம் அரசு புகழ்பெற்ற சுற்றுலாத் தலங்களில் ஒன்றாக விளங்கும் தனாங் நகரில் கொரோனா வைரஸ் பரவல் ஏற்பட்டுள்ளதால், அங்குள்ள சுற்றுலாப் பயணிகள் 80 ஆயிரம் பேரை வெளியேற்றியது.

சுமார் 95 மில்லியன் மக்கள் தொகை கொண்ட வியட்நாமில் இதுவரை, 509 பேர் வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் 373பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)